Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + IV = 16

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
FedEx Express®
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 26 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 27 (11.11.2004) வியாழக்கிழமை இதழ்:42

# நோர்வே வெளியுறவு அமைச்சர் பிரபாகரனுடன் இன்று சந்திப்பு!



## சந்திரிகாவின் செய்தியுடன் வன்னி வருகிறார்!

(கிளிநொச்சி)

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனை இன்று கிளிநொச்சியில் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது குறித்த முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்த இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் மற்றும் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் ஆகியோரும் நேற்று இணைந்து கொண்டனர். நேற்றுப் பிற்பகல் 2.10 மணியளவில் சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானம் மூலமாக இவர்கள் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## முஸ்லிம் இளைஞர் சூட்டுக்குப் பலி!

(பொலனறுவ)

பொல்னறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்த கட்டுவன்வில் கிராமத்தில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

கட்டுவன்வில் - நவசேனைபுரத்திலுள்ள தமது விவசாயக் குடியிருப்பில் தங்கியிருந்த இதயதுல்லா தாஜுதீன் (வயது 31) என்ற இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இவரது வீட்டுக்குச் சென்ற இரண்டு ஆயுதபாணிகள் இவரது பெயரைக் கூறி அழைத்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கட்டுவன்வில்

## புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபை; சாத்தியமில்லை என்கிறார் சந்திரிகா!

(கொழும்பு)

கடந்த இரண்டு தசாப்த காலமாக இலங்கையில் நிலவிவரும் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரும் வகையில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்கு புதிய வழிமுறைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஆனால் இதில் சில வழிமுறைகள் தடைப்பட்டுப் போயுள்ளதென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் இலங்கை வந்திருந்தவேளை ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு நேற்றையதினம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து பேட்டியளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர்

நாட்டை இரண்டாகப் பிரிப்பதிலேயே கனவு காண்கின்றார். சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுப்பது தொடர்பாக நாம் பல்வேறு தீர்வுத்திட்டங்களை முன்வைத்துள்ளோம். ஆனால் அது தொடர்பாக இப்போது கூறமுடியாது.

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான அனைத்து வழிமுறைகளையும் மேற்கொண்டுள்ளோம். ஆனால் எமது கொள்கையெனில் நாம் அரசாங்கம் இதில் ஐக்கிய இலங்கைக்குள் மனித உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய அரசியல் பல்லினத்தன்மை கொண்ட தீர்வையே நாம் விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகளுக்கு தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது தொடர்பாக என்னால் எது



நேற்றுமுன்தினம் இரவு 7.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் இவரது வீட்டுக்குச் சென்ற இரண்டு ஆயுதபாணிகள் இவரது பெயரைக் கூறி அழைத்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப் படுகிறது.

இதேவேளை கட்டுவன்வில் பகுதியில் முஸ்லிம் கிராமங்களில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

முறைகள் தடைப்பட்டுப் போயுள்ளதென ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் இலங்கை வந்திருந்தவேளை றொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு நேற்றையதினம் ஜனாதிபதி மாளிகையில் வைத்து பேட்டியளித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

விடுதலைப் புலிகளின் தலைவர் தற்போதும்

முறைகளையும் மேற்கொண்டுள்ளோம். ஆனால் எமது கொள்கையெனில் நாம் அரசாங்கம் இதில் ஐக்கிய இலங்கைக்குள் மனித உரிமை களுக்கு உத்தரவாதமளிக்கக்கூடிய அரசியல் பல்லினத் தன்மை கொண்ட தீர்வையே நாம் விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகளுக்கு தன்னாட்சி அதிகார சபையை வழங்குவது தொடர்பாக என்னால் எதுவும் கூறமுடியாது அதற்கான வழிகளும் தற்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)



எமது அன்பிற்குரிய வாசகப்பெருமக்கள்!
விநியோகஸ்தர்கள்,
விளம்பரதாரர்கள்,
படைப்பாளிகள் மற்றும் ஆதரவாளர்கள்
அனைவருக்கும்
எமது மனம்நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்

# ஏ9 வீதியை 24 மணிநேரமும் திறப்பது சாத்தியமற்றது!

## ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ்

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடமாகாணத்தைப் புனரமைப்புச் செய்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் வவுனியா அரச செயலகத்தின் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதியின் ஆலோசகரும், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் பணிப்பாளருமான ஹரீம் பீரிஸ் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ சட்டக் கல்லூரி கிளிநொச்சியில் திறப்பு!



(கிளிநொச்சி)

தமிழீழ சட்டக் கல்லூரி நேற்றுக்காலை கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற தமிழீழ சட்டக் கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வுக்கு தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி, யாழ். சட்டத்தரணிகள் சங்கத் தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து சட்டக் கல்லூரியின் பெயர்ப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

ரசிகப் பெருமக்களுக்கு தித்திக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

**7/G றெயின்போ காலனி** (ரீல்ஸ்)

விசேட காட்சி: இரவு 9.00 மணிக்கு (பு.நே)

**கேம்பஸ்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-2723)

**ராஜா** யாழ்ப்பாணம்.

ரசிகப்பெருமக்களுக்கு எமது உளங் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகள்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான




**அட்டகாசம்**

பு.நே 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்

(C.3319)

## தெரிவுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் புதிய ஊழியர்களை பயிற்சி அடிப்படையில் சேர்ப்பதற்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் இருபதாம் திகதி நடைபெறவுள்ளது என மக்கள் வங்கி வடபிராந்திய பிரதேச முகாமையாளர் தெரிவித்தார். (80)

## நெறியாளர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் நீர் வேலி நெறியாளர் கூட்டம் இன்று சங்க மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் அ.த.க.கிருஸ்ணராசா தலைமையில் நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (80)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபையினரால் நாவலர் குருபூசையை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தும் பேச்சுப்போட்டி முன்னர் அறிவித்தது போல் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் (80)

## எட்டாம் ஆண்டு நினைவுநாள்



| பிறந்த திகதி | வீரமரணம் |
|---|---|
| 30 - 08 - 1970 | 11 - 11 - 1996 |

**கடற் கரும்புலி மேஜர் பாரதி**

*(வீரகத்தி கமலராணி)*

நெல்லியடி. கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரசிகப் பெருமக்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான R.B.சௌத்திரியின் சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த



**சத்ரபதி** (ரீல்ஸ்)

முற்பதிவுகளுக்கு யாழ்.பெயின்ற் காடன், நாகம்ஸ் சினிமா கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

காட்சி நேரம்: 11.00, 2.00, 7.00.10.00 (பு.நே)

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம்.

ரசிகப் பெருமக்களுக்கு எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான

இந்தியன் புரூஸ்லி தனுஷ், தியா நடித்த

**ட்ரீம்ஸ்** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.30, 6.30, 9.00 (பு.நே)

(சி-3319)

**சிவன் மோட்டர்ஸ்**



புனரமைப்பின் புத்தொளி வண்ணம்

Paints Dulux

**உளம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்**

70/1 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம்

T.P : 222 2763

# கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின்

## இணைந்த ஆதரவுடன்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

# நடாத்தும்

**க.பொ.த (சா/த) – 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை ( பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) கிளிநொச்சி மாவட்டத்தில் இலவசமாக நடாத்தவுள்ளது.**

**பாடசாலை பரீட்சார்த்திகளும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றலாம்**

## கிளிநொச்சி மாவட்டத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் நிலையங்கள்

காலம் :- 12.11.2004 (கணிதம், விஞ்ஞானம்)
13.11.2004 (ஆங்கிலம்)

01. பூநகரி - பூநகரி மகாவித்தியாலயம்
02. முழங்காவில் - முழங்காவில் மகாவித்தியாலயம்
03. ஜெயபுரம் - ஜெயபுரம் அ.த.க. பாடசாலை
04. பளை - பளை மத்திய கல்லூரி
05. தருமபுரம் - தருமபுரம் மகா வித்தியாலயம்
06. முரசுமோட்டை - முருகானந்தா மகா வித்தியாலயம்
07. வட்டக்கச்சி - வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
08. இராமநாதபுரம் - இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
09. அக்கராயன் - அக்கராயன் மகா வித்தியாலயம்
10. இரணைமடு - கனகாம்ப அ.த.க.பாடசாலை
12. கனகபுரம் - கனகபுரம் மகா வித்தியாலயம்
12. உருத்திரபுரம் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி
13. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மகா வித்தியாலயம்
14. கிளிநொச்சி நகர் - கிளிநொச்சி மத்திய கல்லூரி
15. விசுவமடு - பிரமந்தனாறு மகா வித்தியாலயம்

### வெளிநாடுகளில்

# புலிகள் பற்றிய தகவல்களை அறிய புலனாய்வு அதிகாரிகள் நியமனம்!

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் புலிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டிக்கொள்ளும் நோக்கில், மேலும் நான்கு சிரேஷ்ட புலனாய்வுத்துறை அதிகாரிகள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த வாரம் நியமிக்கப்பட்ட இரு புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரிகளுள் - தாய்லாந்து நாட்டுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

இவர்களுடன் சேர்தது தாய்லாந்தில் மொத்தமாக ஏழு புலனாய்வு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை - பிரிட்டனில் புலனாய்வுப் பணிகளில் ஈடுபடுபடுவதற்கு மேலும் இரண்டு புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பத்திரிகையாளர் என்ற போர்வையில் கடந்த பத்து வருடங்களாகத் தொழிற்பட்டு வந்த ஒரு அதிகாரி - மீண்டும் பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டார்.

இதேவேளை - பிரிட்டனில் பணியாற்றிய இன்னொரு பெண் புலனாய்வு அதிகாரி நாடு திரும்பியிருப்பதாகவும் தெரியவருகிறது.

## சட்டவிரோத ஆயுதங்களை கைப்பற்ற நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள சட்டவிரோத ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

சட்டவிரோத ஆயுதங்களை வைததிருக்கும் பொதுமக்கள் அவற்றை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்குமாறும், சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருப்போர் தொடர்பான தகவல்களைப் பொலிஸாருக்கு வழங்கி உதவுமாறும் அவர் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

# ஜூலை, செப்ரெம்பர் மாதங்களில் 39 எயிட்ஸ் நோயாளிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகவும், இதுவரையில் நாட்டில் 39 எயிட்ஸ் நோயாளிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாகவும், சமுதாய நோய்கள் மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் தொியவந்துள்ளது.

2004 ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை 16 நோயாளிகளும், ஏபரல் - ஜூன் காலப்பகுதியில் 16 பேருமாக 32 பேர் இனம் காணப்பட்டுள்ளனர்.

ஜூலைக்கும் - செப்ரெம்பருக்கும் இடையில் நோயாளர் தொகை 39 ஆகக் கூடியுள்ளது.

இலங்கையில் முதன் முதலில் 1986 ஆம் ஆண்டிலேயே முதலாவது எயிட்ஸ் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார். இதுவரை மொத்தமாக 591 பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1986 இல் முதல் நோயாளி கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னா அதிக நோயாளிகள் இனம் காணப்பட்டது இந்தக் காலப்பகுதியே என இந்த ஆய்வுத் திட்டத்தின் டொக்டர் சாந்த கெற்றி ஆராச்சி தெரிவித்தார்.

591 பேர்களில் 349 பேர் ஆண்கள் எனவும், 245 பேர் பெண்கள் எனவும் கூறப்படுகிறது. சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கருத்தரங்கிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

### அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில்

# நீதி, நிர்வாகத்துறையினருக்கு விசேட ஊக்குவிப்புத் திட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முனணி அரசு எதிர்வரும் 18 ஆம் தகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிககவுள்ள முதலாவது வரவுசெலவுத் திட்டத்தின் மூலம், அரச ஊழியர்களுக்கு 70 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படும்.

இந்தப் புதிய சம்பள உயர்வு. அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமுல் செய்யப்படவுள்ளது என நேற்றுமுன்தினம் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான தேசிய ஆலோசனை சபைக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

அரசாங்க ஊழியர்கள் சம்பளம் தொடர்பாக ஆராய்ந்த திஸ்ஸ தேவேநதிர தலைமையிலான சம்பள நிர்ணய ஆணைக்குழு - அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை 70 சத வீதத்தால் அதிகரிக்கும்படி பரிந்துரை செய்திருந்தது.

அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாம் அமுல்படுத்தவுள்ளோம்.

அரச நிர்வாக இயந்திரத்தில் பொலிஸ் திணைக்களம், நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகியன முககிய இடத்தைப் பெறுவதால், அவர்களுக்குச் சம்பள உயர்வுடன் விசேட ஊக்குவப்புக்களையும் வழங்க உத்தேசித்துள்ளோம்.

பொலிஸாரின் சம்பளத்தை நாம் அதிகரித்தோம். அவர்களின் சம்பளம் ஜனவரி முதல் மேலும் அதிகரிக்கப்படும். சிங்கப்பூரில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்ததன் மூலம் ஊழல் துஷ்பிரயோகத்தை ஒழித்தனர். அதனைமீறி ஊழல் துஷ பிரயோகங்களில் ஈடுபட்டோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படடு வருகிறது என அவர் மேலும் தெரிவிததார்.

# மனோ கணேசன் தலைமையில் கொச்சிக்கடையில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இலங்கையில் சமாதானம் நிலைநாட்டப்படவேண்டும் என்று கோரியும் - மேல் மாகாண மக்கள் முனனணி, கொழும்பு கொச்சிக்கடையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரும், ஐக்கிய தேசியக் கடசியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பெற்றோல், காஸ், உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைக்க வேண்டுமென்றும், ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணங்களைக் குறைக்கவேண்டுமென்றும், இந்த ஆர்ப்பாடடத்தில் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

# விவசாயம் செய்யாத நிலங்களை மீளப்பெற அரசுக்கு அதிகாரமுண்டு

### விவசாய அமைச்சர் அனுரகுமார

ஆறுகளின் நீர் - கடலுக்குள் வீணே செல்வதை தடுத்து, அவறறைக் குளங்களுக்கு திசைதிருப்பும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, விவசாயத்துறை அமைச்சர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் 10 ஆறுகள் எதிர்வரும் வருடங்களுக்குள் குளங்களுக்குத் திசைதிருப்பப்படவுள்ளன.

நாட்டில் விவசாயம் மேற்கொள்ளப்படாத நிலங்களை மீளப்பெறுவதற்கு, எனது அமைச்சுக்கு அதிகாரம் உள்ளது. முதலில் இவ்வாறான நிலங்களில் விவசாயம் செய்வதற்கு உதவிகள் வழங்கப்படும்.

எனினும், அந்த உதவிகளையும் பெற்றுக்கொண்டு விவசாயம் மேற்கொள்ளப்படாத நிலங்கள் - தமது அமைச்சால் பொறுப்பேற்கப்படும்.

இந்த டிசம்பர் மாதத்துக்குள் சுமார் 1012 குளங்கள் புனரமைக்கப்படும்.

அதில் தற்சமயம் 996 குளங்கள் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் 543 குளங்கள் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவிலும் குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவிலும், கிளிநொச்சியிலும் குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

எனினும், இதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் எவ்வித ஆட்சேபனைகளையும் தெரிவிக்கவில்லை.

விவசாயத்துறையை மேம்படுத்தும் முகமாக, சீனாவிலிருந்து முதற்கட்டமாக 10 ஆயிரம் சிறிய உழவு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பண்டாரவளையில் தமிழ் மக்கள் வாழும் கேசன் குளப்பகுதி தொடர்பாக - சமரச தீர்வுக்கு தாம் முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (01)

# வெலிமட நீதிமன்றத்தில் வைத்து சந்தேக நபருக்கு கத்திக்குத்து

(கொழும்பு)

கடந்த மேமாதம் நடந்த கொலை ஒன்று தொடர்பான வழக்கின் பிரதிவாதியான விமானப்படைச் சிப்பாய் ஒருவர் - நீதிமன்ற வளாகத்தில் வைத்துக் கத்தியால் குத்தப்பட்டார்.

ஊவாபரணகம - கலாகமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற கொலை தொடர்பாக 3 பொதுமக்களும், 10 விமானப்படையினரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டு, வெலிமட நீதிமன்றில் விசாரணை நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் வேறு பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதே, விமானப்படைச் சிப்பாய் கத்திக்குத்துக்கு இலக்காகி, காயமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (01)

# இலவச பாடநூலும், சீருடையும் இம்மாதமே விநியோகம்

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான 2005 ஆம் ஆண்டுக்குரிய இலவசப் பாடநூல்களும், சீருடைகளும் இந்த மாத இறுதியில் வழங்கப்படவுள்ளன.

இதற்கான உத்தியோகபூர்வ வைபவம் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறும் என்றும், அதனைத் தொடர்ந்து அரச பாடசாலை மாணவர்களுக்கு பாடநூல்களும், சீருடைகளும் விநியோகிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இந்தத் திட்டம் செயற்படுத்தப் படுவதாக கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு இரகசியங்களை பேணவில்லை

### எஸ்.பி.திஸநாயக்க குற்றச்சாட்டு



தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணையின், இரகசியங்கள் பாதுகாக்கப்படவில்லை என முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் தாம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டமை தொடாபாக எஸ்.பி.திஸாநாயக்க கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இதில் அவர் - எனக்கு எதிரான விசாரணையை மேற்கொண்ட விசாரணைக்குழுவின் தவைரான கிங்ஸ்லி விக்கிரமசூரியவை - ஜனாதிபதி அழைத்து, விசாரணைகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளார்

அத்துடன், விசாரணைக்குழுவின் காவல்துறை உறுப்பினர் பீற்றர் குணதிலக்கவை சந்திக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதன் மூலம் எனக்கு எதிரான விசாரணையின் நம்பகத்தன்மை இழக்கப்பட்டுள்ளது.

எனது வருமானம் மற்றும் செலவுகள் மற்றும் மீதிகள் தொடர்பாக சட்டத்தரணிகள் மூலம் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளேன்.

இதை வருமான வரித் திணைக்களம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும், அதனை அது ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறித்து தெரியப்படுத்தப்படவில்லை.

1981 ஆம் ஆண்டிலிருந்து நான் வருமான வரி செலுத்தி வருபவன் என்ற அடிப்படையில், எனது அறிக்கையை வருமான வரித் திணைக்களம் ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டால், மேலும் தெளிவான அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியும்.

இந்த நிலையில், தற்சமயம் எல்லா விடயங்களும் நீதிமன்றத்துக்கு சென்றுள்ளதால், நீதிமன்றத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கப்போகிறேன்.

நம்பகத்தன்மையற்ற தற்போதைய லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் காலம் இன்னும் 5 வாரங்களில் நிறைவுபெறுவதால், புதிய குழுவின் முன்னிலையில் எனக்கு எதிரான விசாரணையை மேறகொள்ளுமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை லஞ்ச ஊழல் ஆணைக் குழுவின் ஆணையாளரைக் கேட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (01)

### தினேஷ் விடுதலைக்கு

# இஸ்லாமிய தலைவர்கள் மூலம் இலங்கை அரசாங்கம் முயற்சி!

ஈராக்கிய தீவிரவாதிகளால பிடிதது வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரான தினேஷ் தர்மேந்திரா இராஜரத்தினத்தின் விடுதலைக்காக, குவைத் இஸ்லாமிய தலைவர்கள் ஊடாக அழுத்தம் கொடுக்கப்படவிருப்பதாக, பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் -

புனித ரம்ழான் பண்டிகை காலம் என்பதால், இந்த விவகாரத்தில் சாதகமான முடிவை பெற்றுக்கொள்ள முடியும்.

இவர் தொழில் புரிந்த நிறுவன நிர்வாகியான யசீர் முஸ்தபா புதாஹி அவரது விடுதலை தொடர்பாக ஆர்வம் செலுத்தி வருகிறார்.

குவைத்திலுள்ள ஆன்மீக தலைவரான அல் ஷேக் ஹரேக் அல்தாரி ஊடாக அவரது விடுதலைக்கு முயறசிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குவைத்திற்கான இலங்கைத் தூதுவரும், பங்களாதேஷ் தூதுவரும் இராஜதந்திர ரீதியில் தமது நாட்டு பிரஜைகளை மீட்பதற்கான முயற்சிகளை கூட்டாக மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.(01)

## டெஸ்ட் போட்டியில் பங்கேற்க

# தென்னாபிரிக்க அணி இன்று இந்தியா வருகிறது

(ஜொகனஸ்பேர்க்)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி இன்று இந்தியா வரவுள்ளது.

ஸ்மித் தலைமையிலான தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் ஆடுவதற்காக இந்தியா வருகிறது.

கடைசியாக தென்னாபிரிக்க அணி கடந்த 2000 ஆம் ஆண்டு இந்தியாவில் வந்து விளையாடியது. அப்போது 2-0 என்ற கணக்கில் அந்த அணி தொடரைக் கைப்பற்றியது. தற்போது 4 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அணி மீண்டும் இந்தியா வருகிறது.

இந்திய - தென்னரிபிரிக்க அணிகள் இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதிவரை கான்பூரில் நடைபெறவுள்ளது.

2 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி 28 ஆம் திகதி முதல் டிசம்பர் 2 ஆம் திகதி வரை கொல்கத்தாவில் நடைபெறும்.

டெஸ்ட் தொடருக்கு முன்னதாக தென்னாபிரிக்க - இந்திய ஏ அணிக்கும் இடையேயான 3 நாள் பயிற்சி ஆட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இது எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ளது.

இந்திய சுற்றுப்பயணத்தில் இடம்பெறவுள்ள தென்னாபிரிக்க அணி வீரர்கள் விபரம் வருமாறு -

ஸ்மித் (கப்டன்), ஜக் கலிஸ், ஹசிம், ஜஸ்டின் ஒன்ரொங், ஜக் ருடோல்ப், அல்போன்ஸ், தோமஸ், மார்ட்டின் வான், என்ரினி, புருயின், அன்ட்ரூ ஹோல், ஷோன் பொலக், பீற்றர்சன்.

# குடிபோதையில் காரோட்டிய பிஹெல்ப்ஸ் கைதானார்!

(நியூயோர்க்)

குடிபோதையில் காரை ஓட்டியதாக அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பிஹெல்ப்ஸ் கைதுசெய்யப்பட்டார். மேரிலாண்டில் கடந்த வியாழக்கிழமை இரவு இந்தச் சம்பவம் நடைபெற்றது.

வீதியில் வரையப்பட்டுள்ள நிறுத்தும் கோட்டை மீறி குடிபோதையில் ஒருவர் காரை ஓட்டிச் செல்வதை அங்கிருந்த பொலிஸார் பார்த்தார். உடனே விரட்டிச் சென்று அவரைக் கைது செய்தார். அதன் பின்னரே அவர் நீச்சல் வீரர் பிஹெல்ப்ஸ் எனத் தெரியவந்தது.

வீதிப் போக்குவரத்து விதிகளை மீறியதற்காகவும், மது அருந்தியதற்காகவும் பிஹெல்ப்ஸ் மீது குற்றம் பதிவு செய்யப்பட்டது.

குறைந்து 21 வயதானவர்கள் மட்டுமே மேரிலாண்டில் மது அருந்த அனுமதிக்கப்பட்டுள்ளது.




குடித்து விட்டு காரில் பயணம் செய்வது தவறானதும் அபாயகரமானதும் ஏற்றுக்கொள்ளப்படாததும் கூட. ஆனால் அம்மாதிரியான தவறை நான் கடந்த வாரம் செய்துவிட்டேன். இதனால் வருத்தப்படுகிறேன் என பிஹெல்ப்ஸ் தெரிவித்துள்ளார்.

பிஹெல்ப்ஸ் ஏதென்ஸில் கடந்த ஓகஸ்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் 6 தங்கம் உட்பட 8 பதக்கங்களை வென்றார் என்று குறிப்பிடத்தக்கது.

# முரளியின் தூஸ்ராவிற்கு தடை நீக்கப்பட்டது!



(கொழும்பு)

இலங்கையின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் சர்ச்சைக்குரிய தூஸ்ரா பந்துவீச்சை வீசுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் பந்து வீச்சு தொடர்பான குழு, முத்தையா முரளிதரன் சர்ச்சைக்குரிய தூஸ்ரா பந்துவீச்சை வீசமுடியும் என அனுமதி வழங்கியது.

தூஸ்ரா பந்துவீச்சு சர்வதேச கிரிக்கெட் சபையின் பந்துவீச்சு முறைகளுக்கு அமைவாக அமையவில்லை எனத் தெரிவித்து முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சினைத் தடைசெய்தது.

தற்பொழுது பந்துவீச்சின்போது தமது முழங்கையை 15 பாகைக்கு வளைப்பதற்கு பந்துவீச்சாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக ஐ.சி.சியின் உறுப்பினர் அங்குஸ் பிறேய்ஸர் தெரிவித்தார்.

2001 ஆம் ஆண்டின் கூட்டங்களுக்கு அமைய பந்துவீச்சாளர்கள் 5 பாகைக்கு மட்டுமே கையை வளைக்கமுடியும் என்றும் தற்பொழுது இவ் எல்லை 15 பாகையாக மாற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவை எளிதாக வீழ்த்துவோம் என்கிறார் பாகிஸ்தான் அணித்தலைவர்



இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவையொட்டி நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியை எளிதாக வீழ்த்துவோம் என்று பாகிஸ்தான் அணி கப்டன் இன்ஸமாம் தெரிவித்தார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்வதற்கு பாகிஸதான் அணி நேற்று கொல்கத்தாவுக்கு வந்தது.

1999 ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது. அப்போது பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களில் இன்ஸமாம் உட்பட 3 பேர் மட்டுமே தற்போதைய அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த நிலையில் போட்டி குறித்து பாகிஸ்தான் கப்டன் இன்ஸமாம் உல் ஹக் கூறியதாவது -

சொந்த மண்ணில் ரசிகர்களின் அதிக எதிர்பார்ப்புகளோடு இந்தப் போட்டி நடப்பதால் அதிக நெருக்கடி இந்தியாவுக்குத்தான் ஏற்படும். நாங்களும் இந்தப் போட்டியில் வெல்ல அதிக ஆர்வத்துடன் உள்ளோம். எளிதாக வெற்றிபெறுவோம்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கும் இந்த ஆட்டம் கடும் சவால் நிறைந்ததாக இருக்கும். சமீப காலமாக நடந்த ஆட்டங்களில் இந்தியாவைத் தோற்கடித்துள்ளோம். எனினும் அதையே நினைத்துக்கொண்டு இருக்கமாட்டோம்.

இந்திய அணி சிறந்த அணியாகும். எனினும் இந்த ஆட்டத்தில் சிறப்பாக ஆடி எளிதாக வெற்றிபெறுவோம்.

இவ்வாறு இன்ஸமாம் கூறினார்.

# யுவராஜ்சிங்கின் தந்தைக்கு ஆறு மாத சிறைத்தண்டனை

(சண்டிகர்)

இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ் சிங்கின் தந்தை யோக்ராஜ்சிங். இவரும் முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரராவார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இவர் காரில் சென்றுகொண்டிருந்தபோது எதிரே மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவரை இடித்து விட்டார்.

இதில் மோட்டார் சைக்கிளில் வந்தவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. சில ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. இதில் யோக்ராஜ் அதிகமான வேகத்தில் வந்தது நிரூபிக்கப்பட்டதால், அவருக்கு 6 மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.




நியூயோர்க்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 35ஆவது நியூயோர்க் சிட்டி மரத்தான் போட்டியில் முதலிடத்தை எட்டுகிறார். இங்கிலாந்து வீராங்கனை பாவ்லா ரட்கிப். உலக சாதனையாளரான இவர். 42 கிலோ மீற்றர் தூரத்தை 2 மணி 23 நிமிடங்களில் கடந்துள்ளார். கென்ய வீராங்கனை சுசான் செபாகெமி (வலது) 2 ஆவது இடத்தைப்பிடித்தார்.




# மாவீரர் நினைவு உதைபந்தாட்டம் பாடுமீன், சென்.மேரிஸ் அணிகள் மூன்றாம் சுற்றுக்கு தகுதிபெற்றன

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்றைய ஆட்டங்களாக டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாடுமீன் விளையாட்டுக்கழகமும், சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில் முதல் ஆட்டமாக டயமன்ஸ் அணியும், பாடுமீன் அணியும் மோதின. ஆட்டம் தொடங்கப்பட்டு 9 ஆவது, 16 ஆவது நிமிடங்களில் கிடைத்த வாய்ப்பை பாடுமீன் அணியினரும், 14 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை டயமன்ஸ் அணியினரும் கோலாக்கத் தவறிவிட்டனர்.

19 ஆவது நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் கமலேஸ் அடித்த பந்தை டயமன்ஸ் அணி வீரர் ஸ்ரீ தடுக்க முற்பட்டபோது பந்தில் கால் சறுக்கியதால் அவர்கள் பக்கமே கோல் ஆகியது.

இதனால் இடைவேளையின் போது பாடுமீன் அணியினர் 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தனர்.

இடைவேளையின் பின்னர் முதலாவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பையும், 3 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணி கோல் காப்பாளர் வீழ்ந்தபோதும் அதனை வெளியில் அடித்து சந்தர்ப்பத்தை பாடுமீன் அணியினர் வீணடித்தனர்.

இருந்தபோதும் 8 ஆவது நிமிடத்தில் பாடுமீன் அணி வீரர் ரெஸ்கின் நேர்த்தியான கோல் ஒன்றைப் போட்டார். டயமன்ஸ் அணியினர் 13 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பையும், 18 ஆவது நிமிடத்தில் கிடைத்த கோணர் வாய்ப்பையும் திருப்திகரமாக அடித்தபோதும் பாடுமீன் கோல் காப்பாளர் சாதுரியமாக தடுத்தார்.

அதன்பின்னர் பல தடவைகள் முயற்சித்தபோதும் டயமன்ஸ் அணியால் கோல் எதையும் போட முடியவில்லை. இதனால் பாடுமீன் அணி டயமன்ஸ் அணியை 2-0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து மூன்றாம் சுற்றுக்கு தகுதிபெற்றது.

இரண்டாவது ஆட்டமாக சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது. ஆட்டம் தொடங்கி முதல் 5 ஆவது, 19 ஆவது நிமிடங்களில் கிடைத்த வாய்ப்பை ஞானமுருகன் அணியினர் பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

இருந்தபோதும் இரு பக்கமும் சரிசமமாக பந்து விளையாடிக் கொண்டிருந்தது. இரு அணியினரும் கடுமையாக முயற்சித்தபோதும கோல் எதனையும் பெற முடியவில்லை. இதனால் இரு அணியும் இடைவேளைக்கு முன்னர் பூச்சிய நிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கப்பட்டு முதல் 4 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் அணி வீரர் வின்சின் தட்டிக்கொடுக்க அதை கீதராஜ் மிக அற்புதமாக கோலாக்கினார்.

அதைத் தொடர்ந்து 5 ஆவது நிமிடத்திலும் சென்.மேரிஸ் அணி வீரர் பிரபு தடுப்பாளர்களை மீறி கொண்டுபோய் கோலைப் போட்டார்.

அதன்பின்னர் ஞானமுருகன் அணி வீரர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. ஞானமுருகன் அணி வீரர் ஒருவருக்கு 15 ஆவது நிமிடத்தில் மஞ்சள் அட்டையும், இன்னொரு வீரருக்கு 20 ஆவது நிமிடத்தில் சிவப்பு அட்டையும் காட்டப்பட்டது.

சிவப்பு அட்டை காட்டப்பட்ட வீரர் மைதானத்தை விட்டு வெளியேற மறுத்ததால் அமைப்பாளர்களால் அந்த அணி போட்டியிலிருந்து விலக்கப்பட்டது.

இதனால் சென். மேரிஸ் அணி-ஞானமுருகன் அணியை 2-0 என்ற கோல் கணக் கில் தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்குத் தகுதிபெற்றது.

(12)

யாழ். பல்கலைக்கழகத்தில்

# திருக்குறள் ஆய்வுக்கென தனியான பிரிவு வேண்டும்

## கலாநிதி இ.வி.சிங்கன் தெரிவிப்பு

யாழ். பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை திருக்குறள் தொடர்பான ஆய்வுகளுக்கென, ஒரு தனிப்பிரிவை உருவாக்க வேண்டும். அதனூடாக கலாநிதிப் பட்ட ஆய்வுகளுக்கும், முதுமாணிப்பட்ட ஆய்வுகளுக்கும் இடமளிக்க வேண்டும். தமிழை ஒரு வணிக மொழியாக மாற்றியமைக்க வேண்டும்.

அப்படி மாற்றியமைத்தால் அது தமிழுக்கும் நல்லது, இந்த நாட்டுக்கும் நல்லது என - சிங்கப்பூரில் உள்ள ஈ.வி.எஸ் வெளியீட்டு நிறுவன அதிபர் கலாநிதி. இ.வி.சிங்கன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று யாழ். பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில், கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றும் போதே காலாநிதி இ.வி.சிங்கன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் -

திருக்குறள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக சிங்கப்பூரில் உயர்பிரிவுக்கு ஒரு பாடப்புத்தகமாக இருந்து வருகின்றது. திருக்குறளை சிங்கப்பூரில் பரப்புவதற்காக 1921 ஆம் ஆண்டுகளில் தமிழர் இயக்கம் என்ற ஒன்றை ஆரம்பித்தேன். அதனூடாக ஏழைச் சிறார்களுக்கு இலவசமாகத் திருக்குறள் வகுப்புக்களை நடாத்தி வந்தேன். பொதுவாக எந்த நாட்டிலாவது கம்பனுக்கு விழா எடுக்கின்றோம் என்றால் உதவுவதற்குப் பலர் வருவார்கள். இந்தியாவில் இருந்து பிராமணர்கள் நிதி உதவிகளைக்கூட அள்ளி வழங்குவார்கள். ஆனால் திருவள்ளுவருக்கு விழா எடுக்க முன்வருபவர்கள் எவருமில்லை. அப்படி முன் வந்தாலும் உதவுவார் யாருமில்லை. ஏனெனில், திருவள்ளுவர் தமிழர் திருக்குறள் தமிழ் நூல், அதனால் தான் இந்த நிலை.

நாம் எல்லோருமே பாரதியாரைப் போற்றுகின்றோம். 'சிங்களத் தீவினுக்குகோர் பாலமமைப்போம்' என்று அவர் பாடிச் சென்றார். சுத்தப் பிராமணியரான அவருக்கு - இது சிங்களத்தீவா? இலங்கைத் தீவா? என்று அன்று தெரியவில்லை. யூதர்கள் எப்படி தமது நாட்டை மீட்டுக் காப்பாற்றினார்களோ அப்படியே நாமும் எமது நிலத்தை மீட்டுப் பாதுகாக்க வேண்டும்.

உலகில் சுமார் நூறு மில்லியன் வரையிலான தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் தொண்ணூறு வீதமானவர்கள் ஏழைகள். இந்தப் பரம ஏழைகளது பிள்ளைகளின் கல்விக்கு உதவும் வேலைத் திட்டங்களில் நாம் ஈடுபடல் வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்- திருக்குறள் தொடர்பான பட்டப் படிப்புக்களை ஆரம்பித்தால் உலக அளவில் வர்த்தகத் தொடர்புகளை என்னால் செய்து தரமுடியும்.

லண்டனில் நான் படிக்கின்ற காலத்தில் - நான் தங்கியிருந்த கட்டடத்திலேயே பங்களாதேஷிலிருந்து கலாநிதிப் பட்ட ஆய்வுகளுக்கென சில இளைஞர்களும் வந்து தங்கியிருந்தனர். அவர்கள் தமது கலாநிதிப் பட்ட ஆய்வின் போது - வெள்ளையர்கள் வங்காள தேசப் பகுதிகளை ஆண்ட போது செய்தவைகள் யாவுமே சரியானவையே என, வெள்ளைக்காரப் பேராசிரியர்களுடன் உரையாடும் போது கூறுவர். அவர்களது கலாநிதிப் பட்ட ஆய்வுகளிலும் அந்தக் கருத்தே பிரதிபலித்திருக்கும்.

இது பற்றி நான் அவர்களிடம் கேட்டபோது - கலாநிதிப்பட்டத்துடன் ஊர் சென்றாலே, எமது கிராமங்களில் எமக்குரிய மதிப்புக் கிடைக்கும். அதனால் இந்தப் பட்டத்துடன் எமது ஊர் செல்வதே எமக்கு முக்கியம், எனவே இந்தப் பட்டத்தைப் பெறுவதற்காக அவர்களது கருத்துக்களை எமது கருத்துக்களாக ஏற்றுக் கொள்வோம். அவற்றுக்கு நாமும் தலையாட்டிக் கொள்வோம் எனக் கூறினார்கள்.

செய்த தவறுகளையும், அழிவுகளையும் சரியானவையே என ஏற்றுக் கொண்டு பட்டம் பெறவேண்டிய ஒரு பொது நிலை இன்றும் காணப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (31)



எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் புதிய கட்டடத்துக்கான வேலைத் திட்டங்கள் இடம்பெற்றபோது, 55 ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் வீ.ஆர்.சில்வா, அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரி ஆகியோர் அந்த வேலைத் திட்டங்களைப் பார்வையிடுகின்றனர். (படங்கள் : பலாலி படைத்தலைமையகம்)

# தங்கம்மா அப்பாக்குட்டிக்கு சமூக தீபம் கௌரவப் பட்டம்

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்கட்டளை நிதியம் - 'சமூக தீபம்' என்னும் கௌரவப் பட்டத்தை தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய பரிபாலனசபைத் தலைவி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு வழங்கிக் கௌரவித்துள்ளது.

இந்து இளைஞர் பேரவையின் சைவத்தமிழ் மாநாடு கடந்த மாதம் லண்டனில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் வைத்தே இந்தப் பட்டம் வழங்கப்பட்டது.

லண்டன் ஸ்ரீ கனகா துர்க்கையம்மன் ஆலய அறக்கட்டளை நிதியத்தினர் கடந்த 31 ஆம் திகதி தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்துக்கு வருகை தந்து, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஆலய மண்டபத்தில் வைத்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததுடன் 'சமூக தீபம்' பட்டத்துக்கான சான்றிதழையும் கையளித்துச் சென்றுள்ளனர். (17)

# மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்க விரிவான ஏற்பாடு!

எதிர்வரும் மாவீரர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பகுதி மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகளைத் தென்மராட்சி அரசியற்துறையினர் மற்றும் தேசிய எழுச்சிப் பேரவையினர் எடுத்து வருகின்றனர்.

இதற்கமைவாக எதிர்வரும் 20 ஆம் திகதி - கைதடிப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு கைதடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்திலும்,

21 ஆம் திகதி காலை - சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும்,

21 ஆம் திகதி மாலை - கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (29)

# சின்னஞ்சிறு செய்திகள்

## நாவலர் மணி மண்டபத்தில் ஆன்மீகச்சொற்பொழிவு

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில்,

நாளை மாலை 6.30 மணிக்கு கௌரி நோன்பு எனும் தலைப்பில் ஊரெழு அறநெறிப் பாடசாலை ஆசிரியை இராஜமல்லிகை சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

## மாவீரர் நினைவாக உசன் பாடசாலையில் மணி மண்டபம்

(வடமராட்சி)

மாவீரர் ஒருவரின் நினைவாக அவரது தாயாரால் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் முழு அரங்க மணி மண்டபம் ஒன்று அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டு வீரச்சாவடைந்த பிரேமன் என்ற மாவீரரின் நினைவாகவே இந்த மண்டபத்தை அவருடைய தாயார் ஈஸ்வரி அம்மா அமைத்துக் கொடுத்துள்ளார்.

இந்த மண்டபம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டது. பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர். (17)

## பிரதேச சபையுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதால்,

சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் தாமதமின்றி சாவகச்சேரி பிரதேச சபையுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேசசபை செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (17)

## சைவ சித்தாந்தப் பெருவிழா

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் - நீர்வேலி கணேசா அறநெறிப் பாடசாலையின் அனுசரணையுடன் நடத்தும் சைவ சித்தாந்தப் பெருவிழா இன்று மாலை 3.00 மணிக்கு அரசசேகரிப் பிள்ளையார் ஆலய திருநாவுக்கரசு நாயனார் குருபூசை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அறநெறிப் பாடசாலையின் தலைவர் தியாகராஜக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - ஆசியுரைகளை சோமதேவக் குருக்களும், சுவாமிநாதக் குருக்களும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து சிறப்புச் சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

## கடன் வழங்கலுக்கு நிதியுதவி

(சாவகச்சேரி)

சொன்ட் நிறுவனம் - மந்துவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குக் கடனாக 75 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த நிதி, மந்துவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது. (29)

## நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலைய புதிய நிர்வாகம் தெரிவு

(நல்லூர்)

சங்கிலியன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 31.10.2004 ஞாயிற்றுக்கிழமை நிலையக் கட்டடத்தில் இடம்பெற்றபோது, புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

அதில் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

ச.பிறேமதாசன் (தலைவர்), இ.புஸ்பலிங்கம் (உப தலைவர்), இ.ஜெகன் (செயலாளர்), ஆ.கேசவன் (உப செயலாளர்), கோ. தவக்குமார் (பொருளாளர்).

உறுப்பினர்களாக -

பொ.கமலநாதன், உ.உதயசங்கர், பொ.ஜெகநாதன், ம.சாருகேசவன், செ.சந்திரகுமார், ஏ.பிரபாகரன், வ.சிறிஸ்கந்தராசா, தே. ஜீவானந்தன், ஜெ.தனுசியந்தன், சோ.முரளிதரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

# விவாதச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு தீபாவளி தினத்தையொட்டி யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் மாபெரும் விவாதச் சுற்றுப் போட்டி - இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக விகடகவி மு.திருநாவுக்கரசுவும, கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகராஜா, யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல், இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த விவாத இறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் கல்லூரியை எதிர்த்து இணுவில் இந்துக் கல்லூரி வாதிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த வருடத்துக்கான பாடசாலைத் தவணைகள்!

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடத்துக்கான பாடசாலைத் தவணை நாட்கள் பற்றிய விபரங்களைக் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே பிரதி வருடம் தோறும் இருநூற்றிப் பத்து நாட்கள் பாடசாலை நாட்களாக இருக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருப்பினும், 2005 ஆம் ஆண்டில் இடம் பெற்றுள்ள விடுமுறை நாட்களைக் கருத்திற்கொண்டு, 193 நாட்களே பாடசாலை நாட்களாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த உயர்தரப் பரீட்சை நிலையங்களாக செயற்படாத அனைத்துத் தமிழ், சிங்களப் பாடசாலைகளும் - முதலாம் தவணைக்காக ஜனவரி 03 இல் திறக்கப்பட்டு ஏப்ரல் 08 இல் மூடப்படும், இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 27 இல் திறக்கப்பட்டு, ஜூலை 29 இல் மூடப்படும். மூன்றாம் தவணைக்காக செப்டெம்பர் 05 இல் திறக்கப்பட்டு டிசம்பர் 09 இல் மூடப்படும்.

க.பொ.த உயர்தரப் பரீட்சை நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகள் - முதலாம் தவணைக்காக ஜனவரி 03 இல் திறக்கப்பட்டு ஏப்ரல் 08 இல் மூடப்படும். இரண்டாம் தவணைக்காக மே 18 இல் திறக்கப்பட்டு ஆகஸ்ட் 12 இல் மூடப்படும். மூன்றாம் தவணைக்காக ஆகஸ்ட் 29 இல் திறக்கப்பட்டு டிசம்பர் 09 இல் மூடப்படும்.

சகல முஸ்லிம் பாடசாலைகளும் முதலாம் தவணைக்காக ஜனவரி 03 இல் திறக்கப்பட்டு ஏப்ரல் 08 இல் மூடப்படும். இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 18 இல் திறக்கப்பட்டு ஜூலை 29 இல் மூடப்படும். மூன்றாம் தவணைக்காக ஆகஸ்ட் 08 இல் திறக்கப்பட்டு டிசம்பர் 09 ஆம்திகதி மூடப்படும். (31)




# மண்ணை வளமாக்கும் அகத்தி மரம்



அகத்திமரம் உஷ்ணமான பிரதேசங்களில் மிகவும் செழிப்பாக வளரக்கூடியது. நன்றாக முற்றிய மஞ்சள் நிறமான காய்ந்த காய்களிலிருந்து முளைக்க வைப்பதற்கான விதைகளைப் பெற்றுக் கொள்ளலாம். காய்கள் காய்ந்து நாள் பிந்தி மரத்திலிருக்கும் விதைகளில் முளைக்கும் தன்மை குறைவாகும். அதே போல் ஈரமான விதைகளிலும் முளைக்கும் தன்மை குறைவாக இருக்கும். இவை முளைக்க வைப்பதற்குத் தகுந்த விதைகள் அல்ல. எனவே விதைகளை முளைக்க வைப்பதற்கெனத் தேர்ந்தெடுக்கும்போது, மேற்குறிப்பிட்ட விதைகளை வேறாக்கிக் கொள்ளல் வேண்டும்.

முதலில் சாதாரண உயரத்தில் பதியம் போடும் முறையைப் பயன்படுத்தி, அகத்தி விதைகளை முளைக்கவைக்க வேண்டும். பின்னர் அவற்றை மண்ணோடு சேர்த்து, வெட்டி எடுத்து, காகிதப்பை அல்லது பூச்சாடிகளில் முளைக்க வைக்க வேண்டும்.

விதைகளைப் பதியம் போட்டு, அவை முளைத்த பின்னர் தேவைக்கு மேலதிகமான கன்றுகளைப் பிடுங்கி நீக்கிவிட வேண்டும். விதைகள் முளைக்கும்வரை சீரான நீர்விநியோகம் அவசியம். பின்னர் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு ஒரு தடவை நீர் விநியோகம் செய்வது போதுமானதாகும்.

கன்றுகளை மீண்டும் நிலத்தில் முளைக்க வைப்பதற்கு முன்னர், சூரிய ஒளி சிறிதாகப் படுமாறு வைக்கவேண்டும். இதன் மூலம் கன்றுகள் - சூரிய ஒளியைத் தாங்கிக்கொள்ளும் சக்தியைப் பெற்றுக் கொள்ளும். 15-20 சென்றி மீற்றர் உயரமாக வளர்ந்த கன்றுகளை நிலத்தில் மீண்டும் நடலாம்.

45x45x45 சென்றி மீற்றர் அளவுள்ள கிடங்குகளில் கொம்போஸ்ட் மாட்டெரு ஆகிய உரங்களோடு வெளி மண்ணை கலந்து, அதன் மீது கன்றுகளை முளைக்க வைக்கவேண்டும்.

அகத்திக் கன்றுகளை முளைக்க வைத்து எட்டு மாதங்களில் பின்னர் இவைகளை உணவுத் தேவைகளுக்குப் பெற்றுக்கொள்ளலாம். அதிகளவு இலைகளைப் பெற்றுக் கொள்ள கிளைகளை அடிக்கடி வெட்ட வேண்டும். சந்தைக்கு இலைகளை அனுப்பவதாக இருந்தால், காலை நேரத்தில் இலைகளில் நீர் அடங்கியுள்ள சமயம் பார்த்து விளைச்சலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அகத்திமரம் ஒரு மீற்றர் உயரத்துக்கு வளர்ச்சி அடைந்த பின்னர், மேல் தளிரை முறித்துவிடவேண்டும். அப்போது தான் பக்கக் கிளைகள் வளரும். அதன் பின்னர் வெவ்வேறு திசைகளுக்கு 3,4 கிளைகள் திரும்பி நிற்குமாறு விட்டு விட்டு ஏனைய கிளைகளை நீக்கிவிட வேண்டும். இந்தக் கிளைகள் 1 - 11/2 மீற்றர் வளர்ந்து நீண்ட பின்னர் மீண்டும் கிளைகளின் மேற்பக்கத்தை வெட்டி விட வேண்டும்.

விவசாய நிலத்தில் அகத்தி மரத்தை நடும்போது 5 அல்லது 6 மாதங்களுக்கு ஒரு தடவை இயன்றளவு மாட்டெரு கொம்போஸ்ட், கோழிஉரம் ஆகிய உரங்களை இடவேண்டும். அகத்தி மரத்தின் வேர் முடிச்சுக்களால் மண்ணுக்கு நைதரசன் கிடைக்கிறது. இதனால் விவசாய நிலம் வளமடைகிறது.

அகத்தி மரம் குறிப்பாக இலைகள் உண்ணும் புழுவால் பாதிப்படைகிறது. இந்தப் பாதிப்பைத் தவிர்ப்பதற்கு மரத்துக்கு சாம்பல் வழங்கினால் போதுமானதாகும். மிக உஷ்ணமான காலங்களில் 'மாபிரெஸ்' என்ற நோய் ஏற்படலாம். இந்த நோயைக் கிளைகளைக் கத்தரிப்பதன் மூலம் தடுத்துக் கொள்ளலாம்.

வீட்டுத் தோட்டங்களிலும், விவசாய நிலங்களிலும் அகத்தி மரத்தை நடுவதன் மூலம் ஆதாயத்தையும் மண்ணின் வளத்தையும் அதிகரித்துக்கொள்ளலாம். ★

**சசி சந்திரகாசன்**

# பசளி - போசாக்கு நிறைந்த இலை மரக்கறி



வீட்டுத் தோட்டத்தில் பசளிக் கன்றுகளை முளைக்க வைப்பதன் மூலம் எமக்குத் தேவையான சுத்தமான, போசாக்கான இலை மரக்கறியைப் பெற்றுக் கொள்ளலாம். இரண்டு மூன்று பசளிக் கன்றுகளை முளைக்க வைப்பதனூடாகவே தேவையான பசளிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பசளி செடியாகவும், கொடியாகவும் இரு வகைகளாகக் காணப்படுகின்றன. பயிர்ச் செய்கைக்காகப் பெரிய இலைகள் கொண்ட கொடிப் பசளியே பயன்படுத்தப்படுகிறது.

இந்த வகையான செடிகள் 40-50 நாட்கள் வரை புதராக வளர்ந்து, பின்னர் கொடியாகப் பரவும். சில விவசாயிகள் 40-45 நாட்கள் வயதாகிய பசளிப் புதர்களைப் பிடுங்கி விற்பனைக்கு அனுப்புகின்றனர்.

வேறு சில விவசாயிகள், பந்தல் ஒன்றை அமைத்து அதன் மீது கொடிகளை விட்டு, வளர்ச்சி அடைய விடுகின்றனர். இந்த முறையில் முற்றாத தண்டுகளை அடிக்கடி பிடுங்கி அதிக முறை உபயோகிக்கலாம்.

பசளியைத் தண்டுகள் அல்லது விதைகள் மூலம் முளைக்க வைக்கலாம். தண்டுகள் மூலம் வளரும் பசளி - விரைவாகப் பூப்பூக்கும். ஆனால், விதைகள் மூலமாக உருவாகும் பசளியே இலாபகரமானது.

10x10 மீற்றர் அளவான பாத்திக்கு 10-15 கிராம் விதைகள் தேவைப்படும். இந்தப் பயிர்ச் செய்கைக்குச் சீரான நீர் விநியோகம் அவசியம். 40-45 நாட்களான புதர்ப் பசளியில் இருந்து விளைச்சலைப் பெறுவதாயின், கன்றுகளுக்கிடையிலான இடைவெளி 15x15 சென்றி மீற்றர் இருக்க வேண்டும். பசளிப் புதர்களாகப் பிடுங்காமல் கொடியாகப் பரவவிடுவ தாயின், கன்றுகளுக்கிடையேயான இடைவெளி 45x45 சென்றி மீற்றர் இருகக வேணடும்.

விதைகள் முளைப்பதற்கு 5-6 நாட்கள் வரை எடுக்கும் இந்தப் பயிரை பலகாலம் பேண வேண்டுமாயின், முளைக்க வைத்து, 4 வாரங்கள் ஆன பின்னர் நில மட்டத்திலிருநது 1-11\2 அடி உயரத்தில் பந்தல் அமைத்துக் கொள்ள வேண்டும்.

வீட்டில் பயிரிடும்போது, மாட்டெரு பயன்படுத்தி விளைச்சலை அதிகரிக்க முடியும். கோழி உரமும் பயன்படுத்த லாம். 10x10 மீற்றர் பாத்திக்கு 25 கிலோ கிராம் கோழி உரம் தேவைப்படும். விதைகளை முளைக்க வைப்பதற்கு சிறிது நாட்களின் முன்னர், காபனீக் உரம் மண்ணோடு சேர்க்க வேண்டும்.

3-4 வாரங்களின் பின்னர் யூரியா தெளிக்க வேண்டும்.

யூரியா தெளித்த பின்னர் இலைகளின் வெளிப்புறம் நன்றாக நனையுமாறு நீர் தெளிக்க வேண்டும்.

3-4 நாட்களுக்கு ஒரு தடவை பயிருக்கு நீர் விநியோகம் செய்ய வேண்டும். வரண்ட காலநிலையின்போது மரங்கள் வாடி விடலாம். பசளி வர்த்தக ரீதியில் நல்லதொரு சந்தை வாய்ப்புள்ள கீரை வகையாகும். ★

## 100 கிராம் பசளையில் அடங்கி உள்ள போசாக்குகள்

| | | |
|---|---|---|
| ஈரத்தன்மை | - 92.1 | கிராம் |
| சத்து | - 26 | கிலோகலரி |
| புரதம் | - 2.0 | கிராம் |
| கொழுப்பு | - 0.7 | கிராம் |
| மாச்சத்து | - 2.9 | கிராம் |
| கல்சியம் | - 73 | மில்லிக்கிராம் |
| பொசுபரஸ் | - 21 | மில்லிக்கிராம் |
| இரும்புச் சத்து | - 10.9 | மில்லிக்கிராம் |
| கெரோட்டின் | - 5580 | மைக்ரோ கிராம் |
| தயமின் | - 30 | மைக்ரோ கிராம் |
| றைபோவிலேவின் | - 260 | மைக்ரோகிராம் |
| நயசீன் | - 0.5 | மில்லிக்கிராம் |
| விட்டமின் - சீ | - 28 | மில்லிக்கிராம் |
| கனிப்பொருள் | - 0.6 | கிராம் |

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 80/= | 90/= | 100/= | 90/= | 70/= | 100/= | 70/= |
| வெண்டிக்காய் | 50/= | 50/= | 60/= | 50/= | 40/= | 60/= | 50/= |
| உருளைக்கிழங்கு | 90/= | 70/= | 80/= | 90/= | 85/= | 80/= | 90 = |
| கத்தரிக்காய் | 60/= | 50/= | 60/= | 40/= | 40/= | 60/= | 70/= |
| பாகற்காய் | 100/= | 90/= | 100/= | 120/= | 90/= | 100/= | 70/= |
| கரட் | 40/= | 40/= | 50/= | 30/= | 40/= | 60/= | - |
| பீற்றூட் | 20/= | 40/= | 50/= | 25/= | 20/= | 40/= | 40/= |
| முருங்கைக்காய் | - | - | - | - | - | 200/= | - |
| வெங்காயம் | 50/= | 50/= | 60/= | 50/= | 45/= | 50/= | 50/= |
| பச்சை மிளகாய் | 80/= | 50/= | 60/= | 80/= | 70/= | 60/= | 70/= |

## தொழில்மலர்



சி.சத்தியசீலன்

# இன்றைய நவீன முகாமைத்துவமானது மக்கள் பங்களிப்பு முகாமைத்துவமாகும்

**முயற்சியால் உயர்ச்சி பெற்று, மக்கள் சேவையே நோக்கமாகக் கொண்டு, அரச நிர்வாகத்துக்குள் உள்வாங்கப்பட்டு, ஆசிரியப் பணியைத் துறந்து, கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பிரதேச செயலாளராகக் கடமையாற்றும் சி.சத்தியசீலனுடன் சிலமணி நேரங்கள் உரையாடியபோது அவரிடம் இருந்து வெளிப்பட்ட கருத்துக்களை நேர் காணல் பகுதிக்கூடாக வாசகர் முன் நிரல் படுத்துகிறோம்.**

**கலை மாணிப் பட்டதாரியான தாங்கள், முன்னர் வகித்த ஆசிரியர் தொழிலில் இருந்து, உயர் பதவிகளுக்கான அரசாங்க கல்விச் சேவை (S.L.E.S) பரீட்சைக்குத் தோற்றாது இலங்கை நிர்வாகசேவை (S.L.A.S) பரீட்சைக்குத் தோற்றி எவ்வாறு உள்வாங் கப்பட்டீர்கள்?**

நான் ஆசிரிய சேவையில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்திருக்கிறேன். க.பொ.த (உ\தர)ப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு, பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், பின்னர் பட்டதாரி ஆசிரியராகவும் எனது சேவைக்காலத்தில் கடமையாற்றியுள்ளேன். நான் ஆசியராகப் பதவி வகித்தபோது, கல்வித்துறையில் அதிபராக ஒரு நிர்வாக அதிகாரியாக உயர வேண்டுமென்றே ஆவல் இருந்த போதும், அதற்குரிய சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் எனக்குக் கிட்டவில்லை. 1993 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளும், சந்தர்ப்பங்களும் கிடைத்திருந்தன.

**பதவிகள் முக்கியமல்ல, அது எவருக்கும் நிரந்தரமானவையுமல்ல. நாம் எந்தப் பதவியை வகித்தாலும், அந்தப் பதவியினூடாக மக்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற மனோபாவமே முக்கியம்.**

**இலங்கை நிர்வாக சேவைக்குள் சேர்வதற்குத் தங்களிடம் இருந்து அடிப்படைக் காரணிகளை இனங்காட்ட முடியுமா?**

இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை என்பது, ஏனைய பரீட்சைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்தப் பரீட்சையின்போது, வரும் வினாக்கள் ஒருவரின் விவேகம், பொதுஅறிவு, கிரகித்தல் போன்ற பல விடயங்களை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. அரசியல் விஞ்ஞானம் என்ற பாடத்தில் எனக்கு இயல்பாகவே நாட்டமும், உலக அரசியல் பொது அறிவு என்பன தொடர்பான அறிவும், ஆசிரியராக இருந்தபோது கிடைத்த ஓய்வு நேரங்களில் பத்திரிகைகளைக் கிரமமாக வாசித்தமை காரணமாக, உலக விவகாரங்கள் தொடர்பாகச் சேகரித்துக் கொண்ட பரந்த அறிவும் நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியடையக் கூடிய வாய்ப்பை எனக்கு ஏற்படுத்தியிருந்தது.

**ஆசிரியர் சேவையின் அனுபவங்களும், அரசாங்க நிர்வாக் சேவைக்குப் பயனுள்ளதாகக் கருதுகிறீர்களா?**

ஆசிரிய சேவைக்கும், நிர்வாக சேவைக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இல்லாத போதும், ஆசிரியப் பணிமூலம் பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. இதனால், பல மாணவர்களின் குடும்பப் பின்னணிகள் குறிப்பாக வறுமை நிலையில் உள்ள மாணவர்களின் வாழ்க்கை நிலையைப் பற்றியதான ஓரளவு அனுபவங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. அத்துடன், பெற்றோர், ஆசிரியர்கள் சந்திப்புக்களுக்கூடாக ஏற்பட்ட சமூக நாட்டமும் நிர்வாக சேவையில் எனது கடமைகளைச் செய்ய உதவியாக இருந்தது.

**தாங்கள் உதவிச் செயலராகவும், பின்னர் பிரதேசச் செயலராகவும், வவுனியாப் பிரதேசத்தில் கடமையாற்றிய பின்னர், கரவெட்டிக்கு உதவிச் செயலராகவும், பிரதேச செயலராகவும் கடமை புரிகின்றீர்கள். இத்தகைய மாற்றங்கள் உங்கள் மனதில் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்தியதுண்டா?**

அரசாங்க சேவையைப் பொறுத்த மட்டில், பதவிகள் முக்கியமல்ல. அது எவருக்கும் நிரந்தரமானவையுமல்ல. நாம் எந்தப் பதவிகளை வகித்தாலும், அந்தப் பதவிகளுக்கூடாக, மக்களுக்குக் கிடைக்கக் கூடிய சேவைகளைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற மனோபாவம் எமக்கு இருக்குமாயின், பதவிகள் தொடர்பாக நாம் பெரிதாகக் கவலைப்படவேண்டியிருக்காது.

**கரவெட்டிப் பிரதேச வளர்ச்சிப் படிக்கான திட்டவரைபுகள் ஏதாவது தங்களிடம் உண்டா?**

வடமராட்சிப் பிரதேசத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அமைந்துள்ளது கரவெட்டிப் பிரதேசம். இந்தப் பிரதேச செயலகத்தினூடாகப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

இதற்குப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பும், ஏனைய திணைக்களங்கள் உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் மிகவும் முக்கியமாகத் தேவைப்படுகிறது. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி என்பது - எல்லோரும் இணைந்து குழுவாகச் செயற்படுவதன் மூலமே அடையமுடியும். இன்றைய முகாமைத்துவத்தின் போக்கும் மக்களின் பங்களிப்புடனான நிர்வாக ஒழுங்கமைப் பாகவே காணப்படுகிறது. எமது பிரதேசத்தைப் பொறுத்த மட்டில் அடுத்த ஆண்டில் நடை முறைப்படுத்தவுள்ள "நியாப்" இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்தில் எமக்கு கணிசமான அளவு கிராமங்கள் கிடைக்கும் பட்சத்தில், எமது பகுதியில் மிகவும் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும். அத்துடன், பிரதேச சபை மற்றும் அமைச்சுக் களில் இருந்து கிடைக்கும் நிதிகள் ஊடாகவும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்கலாம் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இதற்கு இந்தப் பிரதேசத்திலுள்ள கல்விமான்கள், அறிஞர் கள், சமூக ஆர்வலர்கள், சமூக நலன் விரும்பிகள் அனைவரையும் உள்ளடக்கிய ஆலோசனைச் சபை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலம், இந்தச் சபையினூடாக முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**நிர்வாக உத்தியோகத்தர், பொதுமக்கள் உறவாடல் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பொதுமக்கள் பல்வேறு தேவைகளுக்காக அலுவலகங்களுக்கு வருகிறார்கள். அவர்களுடன் அன்பாகப் பேசி, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உரிய தீர்வைக் காண வேண்டியது நிர்வாக உத்தியோகத்தர்களின் கடமையாகும். அவர்களின் தேவைகளை கால தாமதப்படுத்தாது, பூர்த்தி செய்து கொடுப்பதனூடாக அவர்களைத் திருப்திப்படுத்த முடியுமென்றாலும், பொதுமக்கள் கோரிக்கைகள் எல்லாவற்றையும் பூர்த்தி செய்யவும் முடியாது.

அப்படியான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஆறுதலளிகக் கூடிய வார்த்தைகளைக் கூறுவதன் மூலம் அவர்கள் அமைதியாகவும், ஆறுதலுடனும் செல்லக் கூடிய நிலையை உருவாக்க வேண்டும்.

**(அடுத்த வாரம் தொடரும்...)**

**எஸ்.ஜே.என்.**

# மேலாண்மை என்பது செயல்முறை சார்ந்தது

(சென்றவாரத் தொடர்ச்சி...)



ஒரு மேலாளர் நாள் முழுவதும் பலரோடு தொடர்பு கொள்ள வேண்டியுள்ளது. நிறுவனத்தின் முதலீட்டாளர்களுக்கு நல்ல இலாபத்தை ஈட்டித்தர வேண்டும். அவர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும். வாடிக்கையாளர் - நிறுவனத்தின் மீது வைத்துள்ள நன்மதிப்பைக் காப்பாற்ற வேண்டும். வளர்க்கவேண்டும். நிறுவனத்துக்கு மூலப் பொருட்களை வழங்குபவர்களுடன் நல்லுறவு வைத்துக்கொள்ள வேண்டும். தன்னையொத்த மேலாளர்களுடன் நட்புறவோடும், விட்டுக்கொடுக்கும் பாங்குடனும் பழகவேண்டும். சமுதாயத்தில் தம் நிறுவனத்துக்கு அங்கீகாரம் பெற்றுத்தரவேண்டும். சமுதாயத்தில் ஓர் அங்கமாக நிறுவனத்தை மாற்றவேண்டும்.

தனக்குக்கீழ் பணியாற்றும் பணியாளர், தொழிலாளர்களின் மனதில் நம்பிக்கையை வளர்க்க வேண்டும். அவர்களுக்குப் பிரச்சினைகள் எதுவும் இருந்தால், அதனை உடனே தீர்த்து வைக்க வேண்டும். இவ்வாறு பலநிலைகளிலும் ஏற்படும் உறவை ஒரு பிரிவின் மேலாளர் நல்லுறவாக வளர்த்து, தன்னுடைய நிறுவன வளர்ச்சிக்கு உதவுகிறார்கள்.

இதற்கு நடுநிலைமையும், மற்றவர்களைப் புரிந்துகொள்ளும் திறமையும் வேண்டும். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியானவர்கள் இல்லை. அவர்களின் குணங்கள் வேறுபட்டவை. ஒரு தொழில் நிறுவனத்தில் என்னதான் தகுதிகளும், திறமைகளும், அனுபவ அறிவும் நிர்ணயித்து அவர்களைத் தேர்வுசெய்தாலும், அவர்களிடையே வேறுபாடுகள் உண்டு. எனவே, அவர்களுடைய தகுதிக்கேற்பவும், திறமைக்கேற்பவும், செயலார்வத்துக்கேற்பவும் பொருத்தமான வேலையை வழங்கினால் அவர்கள் அதிக விளைவுகளை நிறுவனத்துக்கு ஏற்படுத்தித் தருவார்கள்.

மேற்கத்தைய நாட்டு மேலாண்மைக்குரிய வழிமுறைகள் செங்கற்சுவர் கட்டுவது போன்றவை. செங்கற்கள் ஒரே நீளம், அகலம், உயரம் உடையவை. அதே போன்று மனிதர்களும் தகுதிகள் அடிப்படையில் ஒத்தவர்கள், என்ற கோட்பாட்டில் தொழிலிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால், கீழைத்தேய நாட்டு மேலாண்மைக்குரிய வழிமுறைகள் - கருங்கற்கள் சுவர் கட்டுவது போன்றவை. கருங்கற்கள் ஒத்த அளவு உடையவை இல்லை. கருங்கற்கள் சுவரில் எந்த இடத்தில், எந்தக் கல் பொருந்துமோ அந்த இடத்தில் அந்தக் கல் வைத்துச் சுவர் கட்டப்படும். இதேபோன்று, மனிதர்களும் வேறுபட்டவர்கள். அவர்களுடைய தகுதி, செயலார்வம் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்குப் பிடித்த வேலையைக் கொடுத்தால், உற்பத்தித்திறன் அதிகரிக்கும்.

எனவே, கீழைத்தேய நாட்டு மேலாண்மை உத்திகளே வெற்றிகரமான மேலாண்மைக்கு வழிகாட்டுபவை.

மேலாளர்கள் தமக்குக் கீழ் பணியாற்றுபவர்களுக்கு வேலையை ஒப்படைத்தால் மட்டும் போதாது. பணிக்குரிய விளக்கங்களும் கொடுக்கவேண்டும். பொறுப்புகள் வழங்கினால் மட்டும் போதாது. அவற்றை நிறைவேற்ற அதிகாரங்களும் வழங்க வேண்டும். பொறுப்புகளும், அதிகாரங்களும் தனக்குக் கீழிருப்பவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது. எனக்குப் பொறுப்புகள் குறைந்துவிட்டது என மேலாளர் நினைக்க முடியாது. அனைத்து விளைவுகளுக்கும் அவரே பொறுப்பாவார்.

☆ மேலாளர் தன்னுடைய நிறுவனத்தின் பலம், பலவீனம், நிறுவனத்தை எதிர்நோக்கும் வாய்ப்புகள், இடர்கள் ஆகியவற்றைப் பகுப்பாய்ந்து பலமுள்ள களங்களில் செயற்படவேண்டும்.

☆ பலவீனமுடைய களங்களைத் தவிர்க்க வேண்டும்.

☆ வாய்ப்புகளைக் காலமறிந்து, இடமறிந்து பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

☆ இடர்களை எப்படித் தவிர்க்கலாம், அல்லது எப்படி எதிர்கொள்ளலாம் என்பதைக் கண்டறிய வேண்டும்.

இத்தகைய பகுப்பாய்வுப் பயிற்சி மேலாண்மையியல் கல்வியால் அவருக்குக் கிடைக்கிறது.

பயிற்சி பெற்ற அனுபவமுள்ள மேலாளர்களே அறிவியல் அடிப்படையில் மேலாண்மையையும், நிர்வாகத்தையும் வெற்றிகரமாகச் சாதித்துக் காட்ட முடியும்.

நிறுவனமும் தனது குறிக்கோளை இடர்கள் இல்லாமல் எய்த முடியும். ✪

# மருதங்கேணி வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு அமைக்க கோரிக்கை

(மருதங்கேணி)
மருதங்கேணி வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு ஒன்றை அமைத்துத் தரும்படி அந்தப் பகுதி மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டுக்கு முன் வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவு இயங்கி வந்தது. இந்த வைத்தியசாலையில் பற்சிகிச்சைக்கென தனியான அறை அமைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான தளபாடங்களும் வழங்கப்பட்டிருந்தது.

வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இங்கு வருகைதரும் பல் வைத்தியர் பறசிகிச்சை வழங்கி வருகிறார்.

தற்போது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலையில் பற்சிகிச்சைக்கான அறையெதுவும் கட்டப்படவில்லை. அத்துடன், பற்சிகிச்சைக்கான தளபாடங்களும் வழங்கப்படவில்லை.

ஆகவே, இந்தப்பிரதேச மக்கள் பற்சிகிச்சைபெற சாவகச்சேரி, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளுக்கு வெகு சிரமத்தின் மத்தியில் சென்று வருகின்றனர்.

மக்களின் நன்மைகருதி இந்த வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்துத் தரும்படி பிரதி மாகாண சுகாதார சேவைப் பணியாளர்களுக்கு மருதங்கேணி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்புக்குழு என்பன கோரிக்கை விடுத்துள்ளன. (21)



தற்போது பெய்துவரும் மழையினால் கிளிநொச்சி ஏ 9 பிரதான வீதியிலுள்ள டிப்போச் சந்தியில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்குத் தடை ஏற்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (படம் : வே.சீலன்)

## வவுனியா - நெடுங்கேணி மருதங்குளம் நீர் மட்டம் உயர்ந்து வான்பாய்கின்றது!

(வவுனியா)
வவுனியா - நெடுங்கேணி மருதங்குளம் வான் பாய்கிறது.

கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக மருதங்கேணிக் குளத்தின் நீர் மட்டம் உயர்ந்து வான்பாயத் தொடங்கியுள்ளது.

இதேவேளை நெடுங்கேணிக் குளத்தின் துருசு, வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இதேபோன்று, நெடுங்கேணி இரம்பைக் குளம் வான்பாயும் அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்துள்ளது. கிளிநொச்சி கனகாம்பிகை குளம், நட்டாங்கண்டல் குளம், கொல்லவிளான் குளம் ஆகிய குளங்களும் வான்பாய ஆரம்பித்துள்ளன.

## கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

கிளிநொச்சி - முழங்காவில் தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு கடந்த 7 ஆம் திகதி இடம் பெற்றது.

முழங்காவில் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் அகக்குமரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

பொதுச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் பசுவதிப்பிள்ளை ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியைக் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றிவைத்தார். அரங்க நிகழ்வுகளில் கருத்துரைகளை - மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழன், தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த மோகன், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் பயஸ், முழங்காவில் தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் நவரட்ணம் உட்படப் பலர் நிகழ்த்தினர்.

அத்துடன், இந்தக் கலந்துரையாடலில் மாவீரர் நாள் செயற்பாடுகள் தொடர்பாகவும், கலந்துரையாடப்பட்டது.

## உடுத்துறை மகா வித்தியாலயத்தின் கட்டட வேலைகள் பூர்த்தியாகவில்லை!

(கிளிநொச்சி)
உடுத்துறை மகாவித்தியாலயத்தின் கட்டட வேலைகள் இதுவரை பூர்த்தி செய்யப்படாமையால் தற்காலிக கொட்டகைகளிலேயே இயங்கி வருகிறது.

கடந்த நான்கு நாட்களாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக, வகுப்பறைகளில் வெள்ளம் புகுந்து நீர்தேங்கி நிற்பதால் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வகுப்பறைகளில் நீர்தேங்கி நின்றதால் 'நமது ஈழநாடு' பத்திரிகையின் அனுசரணையுடன் கடந்த 8 ஆம் 9 ஆம் திகதிகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரண தர பரீட்சையின் மீட்டல் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதில் ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் இடப்பிரச்சினைகளை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது. (21)




## கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலையின் தற்காலிக கொட்டகை அபாய நிலையில்!

கட்டைக்காட்டு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலையில் அமைக்கப்பட்டிருக்கும் 100X20 நீளமான தற்காலிகக் கொட்டகை சரிந்து விழும் நிலையில் காணப்படுகிறது.

கடும் காற்று, மழை நேரத்தில் எப்போது சரிந்து தம் தலைமீது விழுமோ என்ற அச்சத்துடனேயே கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை ஆசிரியர்களும், மாணவர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

140 மாணவர்களைக் கொண்ட 6 ஆம் தரம் வரையுள்ள இந்தப் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தரும்படி - கல்வித் திணைக்கள அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடம் கோரிக்கை விடப்பட்டிருந்தும் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையென, பெற்றோர் கவலை தெரிவித்தனர். (21)

## சின்னஞ்சிறு செய்திகள்

### கட்டட வசதியின்றி ஈச்சிலாவத்தை முன்பள்ளி

மன்னார் பெரியமடு - ஈச்சிலாவத்தைக் கிராம முன்பள்ளி, கட்டட வசதி இன்றி ஓலைக் கொட்டகையில் இயங்கி வருகிறது.

தற்போது பெய்து வரும் மழையால் இந்தக் கொட்டிலில் மழைநீர் தேங்கிக் காணப்படுகிறது. இதனால் முன்பள்ளிச் சிறார்கள் பெரும இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் பனந்தொழில் மேற்கொள்பவர்களுக்கு, கியூடெக் நிறுவனத்தால் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பூநகரி - கௌதாரிமுனை, செட்டியாக்குறிச்சி, மட்டுவில் நாடு கிழக்கு, மட்டுவில்நாடு மேற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 28 பனந்தொழில் மேற்கொள்பவர்களுக்கு கியூடெக் நிறுவனத்தினரால் பனந்தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

### மாவீரர் நாளை முன்னிட்டு கலை நிகழ்வுகள்

மாவீரர் நாளை முன்னிட்டு உடுத்துறை மகாவித்தியாலய அரங்கில் எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் கலை நிகழ்வுகள நடத்துவதற்கான ஒழுங்குகள் மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுவினரால் செய்யப்பட்டுள்ளன.

முன்பள்ளி மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், கலாமன்றத்தினர் பங்கு பங்குபற்றும் இந்த நிகழ்வில் - நடனம், நாடகம் மற்றும் கலைநிகழ்வுகள் நாள்தோறும் நடத்தப்படவிருக்கின்றன. (21)

### லெப். கேணல் அன்புவின் நினைவுநாள் நாளை!

முல்லைத்தீவு - மணலாறு மாவட்ட சிறப்புத் தளபதி மாவீரர் லெப்டினன்ட் கேணல் அன்புவின் நினைவுநாள் நாளை இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வில் மணலாற்றில் உள்ள அன்பு கலையரங்கில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். இந்த நிகழ்வில் நினைவுரைகள், சிறப்புரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

### சிரமதானப் பணி

மாவீரர் நாளையொட்டி மருதன்கேணி கிராமிய வைத்தியசாலையின் உட்புற சுற்றாடலும், வீதியோர வெளிப்புற சுற்றாடலும், கடந்த திங்கட்கிழமை சிரமதானமூலம் துப்புரவு செய்யப்பட்டன.

ஆழியவளை கிராம அலுவலர் வி.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்தச் சிரமதானப் பணியில் செம்பியன்பற்று தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், செம்பியுன் பற்று தெற்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (21)

### மீட்டல் வகுப்புக்கள்

மன்னார் மாவட்டத்தில் இந்த ஆண்டு கல்வி பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான விசேட மீட்டல் வகுப்புக்கள் இடம்பெறுகின்றன.

இந்த விசேட மீட்டல் வகுப்புக்கள் - பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், இலுப்பைக் கடவை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கருங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில்,

சனி, ஞாயிறு, ஆகிய இரு தினங்கள் கொத்தணி முறையில் துறைசார் ஆசிரியர்களால் மீட்டல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

### வெடிபொருள் விழிப்புணர்வு கருத்தரங்கு!

(வவுனியா)
வவுனியர் கனகராஜன் குளத்தில் வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை வெண்புறா நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

1997 ஆம் ஆண்டு ஜெயசிக்குறு படைநடவடிக்கை மூலம் கனகராயன் குளத்தைக் கைப்பற்றிய இராணுவத்தினர், இந்தப் பகுதியில் பெருமளவு வெடி பொருட்களை புதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

தற்போது இந்தப் பகுதியில் மக்கள் மீளவும் குடியமர்ந்துள்ளமையால், வெண்புறா நிறுவனத்தினர் மக்கள் மத்தியில் வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வு செயற்பாட்டை மேற்கொண்டு வருகின்றனர்.

### துர்நாற்றம் வீசும் கழிப்பறைகள்

வவுனியா - நெடுங்கேணி நாகதம்பிரான் ஆலயத்துக்குப் பின்புறமாகவுள்ள மலக்கழிப்பறைகள் சுகாதார சீர்கேடான நிலையில் காணப்படுகின்றன.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்தக் கழிப்பறைகளில் இருந்து துர்நாற்றம் வீசுகின்றது.

இந்தக் கழிப்பறைகள் வவுனியா உள்ளூராட்சி சபையின் பராமரிப்பின் கீழ் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மாலை நேர கல்விக்கூடம் முள்ளியவளையில் திறப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - முள்ளியவளைப் பிரதேசத்தில் மாவீரர் மேஜர் பசிலன் நினைவாக மாலை நேர கல்விக்கூடம் ஒன்று கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்திய இராணுவத்துடனான மோதலின்போது வீரகாவியமான, வன்னி மாவட்டத் தாக்குதல் தளபதி மேஜர் பசிலனின் 17 ஆம் ஆண்டு நினைவாக, முள்ளியவளை - நாவற்காடு பிரதேசத்தில் மாலை நேரக் கற்றலை மேம்படுத்தும் வகையில் இந்த மாலை நேரக் கல்விக்கூடம் திறந்துவைக்கப்பட்டது.

### மன்னார் மண்டைதீவில் ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு

மன்னார் மாவட்ட நகரசபை மண்டபத்தில் - ஆசிரியர்கள், மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை இடம்பெறும்.

மன்னார் மாவட்டத்தில் தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையினரின் ஆதரவுடன் உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர்களுக்கிடையே நடத்தப்பட்ட மொழித்திறன் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற்ற ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும்,

2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் நாளை காலை 9 மணிக்கு இடம் பெறும்.

## மடு கல்வி வலய கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக்குறையே காரணம்

### மன்னார் கல்விக் கழகப் பொறுப்பாளர் தெரிவிப்பு

மன்னார் மாவட்ட மடுக்கல்வி வீழ்ச்சிக்கு ஆசிரியர் பற்றாக்குறையே காரணம் என, மன்னார் மாவட்ட தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் தெரிவித்தார்.

மடுக்கல்வி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை என்பது படுமோசமான நிலையிலுள்ளது. இந்தக் கல்வி வலயத்தில் 2 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர். இத்துடன் நடனம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லை. இங்கு மாணவர்களுக்குரிய பௌதீகவளம் ஓரளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்தாலும், ஆசிரியர் வளம் என்பது மிகமோசமான நிலையில் அரசால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது.

இதனால் கடந்தகால போரால் சிதைவடைந்துபோயுள்ள இந்தப் பகுதி மாணவர்களுடைய கல்வியைப் பலப்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

## 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீடு

புலிகளின் குரல் நிறுவனத்தின் வெளியீடான பால கணேசனின் 'வர்ணங்கள் கரைந்த வெளி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரே ற்றல், ஈகைச் சுடரேற்றல், வரவேற்புரை, நூல்வெளியீடு, சிறப்புப் பிரதி வழங்கள், மதிப்பீட்டுரை, சிறப்புரை, பதிலுரை, நன்றியுரை ஆகியன இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு புலிகளின் குரல் நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன், உலக உணவு விவசாய ஸ்தாபனம் சாக்தபுரம், ஊற்றுப் புலம் கிராம மக்களுக்கு நல்லின கோழிக் குஞ்சுகள் வழங்கியது.

இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் ஒரு குடும்பத்துக்கு 9 ஆயிரத்து இருநூறு ரூபா பெறுமதியான - எட்டு நல்லின கோழிக் குஞ்சுகள் வீதம், மொத்தமாக 400 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்டத்தின் கிளிநொச்சிப் பிரதேச இணைப்பாளர் பாஸ்கரன், உலக உணவு ஸ்தாபன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மா.செல்வராசா, சி.தேவராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## சட்டம் ஒழுங்கு கெட யார் காரணம்? ஊழல் மோசடியாளர்கள் எவர்?

நீதிமன்றங்களும், பொலிஸ் திணைக்களமும் மோசடிக் காரர்களின் கூடாரமாகிவிட்டன என்றும், இதன் காரணமாகவே நாட்டில் சட்டம் ஒழுங்கு அனைத்தும் சீர் குலைந்து விட்டுள்ள தாகவும், வேறு எவருமல்ல நாட்டின் நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட ஜனாதிபதியே கூறியிருப்பதானது – இந்த நாட்டுமக்கள் சட்டத்தின் பேரிலும், நீதியிலும் வைத்துள்ள அற்பசொற்ப நம்பிக்கையையும் முற்றாக இழக்கவைத்துள் ளது.

அரசியலில் மோசடிகளும், நேர்மையீனங்களும் ஒரு கலாசாரமாகவே உருப்பெற்றுள்ள நிலையில் அரசியல் அதி காரத்தில் உள்ளவர்களின் ஊழல் நடவடிக்கைகளும், அதிகா ரத் துஷ்பிரயோகச் செயல்களும் முழு நாட்டினது எதிர்காலத் தையும் கடந்த சில தசாப்தங்களாகவே பாழடித்து வருவது ஒன்றும்இரகசியமான விடயமல்ல.

பதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் போர்ச் செலவினங்கள் என்ற பெயரில் நாட்டு மக்களையும், நாட்டின வளத்தையும் எந்தவிதமான தொலைநோக்கு சிந்தனையுமின்றி துன்பப் படுத்தியும், வீணடித்தும் வந்த ஆட்சிப்பீடத்து அதிகார வர்க்கத் தினரே நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் திணைக்களம்மீது தமது கட்டுப்பாட்டை முழுமையாக வைத்திருந்தனர் என்பதை கடந்தகால அரசியல் போக்கினை அவதானித்துவந்தோர் அறிவர்.

தமிழ்மக்களுக்கு எதிரான தீவிரம்கொண்டிருந்த காலப் பகுதியில் இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸ் திணைக் களத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் மேற் கொண்ட திடீர் சுற்றிவளைப்பு சோதனை நடவடிக்கைகளின் போது கண்மூடித்தனமான கைதுகளின்போதும் தமிழ்மக்கள் எத்துணை அவமதிப்புகளுக்கும், அவலங்களுக்கும் ஆளா னார்கள் என்பதற்கு சான்றாதாரமாக ஒரு வரலாறு உண்டு.

போரைக் காரணங்காட்டி பாதுகாப்பு செலவினம்என்ற வகையில் ஒதுக்கப்பட்ட பல்லாயிரம் கோடி ரூபாய்களில் ஆயுதக்கொள்வனவுகளை மேற்கொண்டபோது நடைபெற்ற ஊழல்களின்அளவு குறித்து தென்பகுதி சிங்கள, ஆங்கில ஊடகங்களே பக்கம் பக்கமாக எழுதியமை வரலாற்றுச் சான்றாவணமாகவே உள்ளது.

இவற்றையெல்லாம் பார்த்தும் பாராமலும், உணர்ந்தும் உணராமலும் – மௌன அங்கீகாரமளித்து ரசித்து அனுப வித்த கொடுமைகளை புரிந்தவர்கள் அரசியல் தலைமைப் பதவிகளை அங்கீகரித்த அதிகாரவர்க்கத்தவரே ஆவர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதல், இன்றைய ஜனாதிபதி வரை பதவியிலிருந்து நிறைவேற்று அதிகாரிகள்அனைவரும் தான் இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும். ஊழல் மோசடி களில் ஈடுபடாத அரசியல்வாதிகளை நுணுக்குக்காட்டி வைத் துத் தேடினாலும் ஒருவராவது அகப்படுவாரா என்பது சந்தேக மேயாகும். அரசியலில் ஊழல் என்பது அரசியல்வாதிகளின் மோசடிகளால் ஏற்படுவதேயாகும். மோசடிக்கார அரசியல்வாதி களே தமது குற்றச்செயல்கள் வெளியேவராமல் இருப்பதற்கு பொலிஸ் திணைக்களத்தையும் நீதிமன்றங்களையும் தமது அழுத்தங்களுக்குக் கீழ்ப்படியும் அமைப்புகளாக செயற்பட வைத்தனர் என்பதும் கதையோ படமோ அல்ல. நிஜமேயா கும்.

குற்றவாளிகளில் பலரும் அரசியல்வாதிகளின் ஆசீர்வா தம் பெற்றவர்கள் என்பதை சட்டமறிந்தவர்களை விசாரித்தால் தெரிந்துகொள்ளமுடியும்.

நாட்டில் குற்றச்செயல்களின் அதிகரிப்புக்கு – இராணுவத் தில் இருந்து பயிற்சிபெற்றபின் களத்தை எதிர்கொள்ளப் பயந்து தப்பியோடிய பல்லாயிரக்கணக்கானோரே காரணம் என்றும் – அரச மற்றும் பாதுகாப்புத்துறை வட்டாரங்களை ஆதாரங்காட்டி வெளியான ஊடகச் செய்திகள் ஏராளம் உண்டு.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த படையினரில் சிலர் பாதாள உலகக் கும்பலுடம் தொடர்புள்ளவர்கள் என்ற செய்தியை கடந்த பொ.ஐ.முன்னணி ஆட்சிக்காலத்தில் எதிர்க்கட்சியினர் அம்பலப்படுத்தியதும் நினைவிருக்கலாம். ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவுத் தலைவராக விளங்கிய நிஹால் கருணாரத்ன மற்றும் பெத்தேகம சஞ்ஜீவ போன்றோரும் கூட குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதும் நினைவிருக்கலாம். சஞ்ஜீவ பின்னர் மர்மமான முறையில் கொல்லப்பட்டார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரே கொலைக் குற்றஞ்சாட்டப்பட்டு, இன்னமும் வழக்கு விசாரணைகளுக்குள் ளாகிவரும் ஒருவர் என்பதையும் கவனத்தில்கொள்வது அவசி யம். இவர் தனது அதிகாரம் வலுப்பெற்றிருந்த காலத்தில் – பொலிஸ் திணைக்களத்தையும், பாதுகாப்புப் படையினரையும் எவ்வாறு கையாண்டார் என்பதை சொல்லிவிளங்கவைக்க வேண்டியதில்லை.

நீதிமன்ற விசாரணைகளும் ஆட்சி அதிகாரத்தில் உள்ள வர்களின் மறைமுகத் தலையீடுந்தான் பல நிரபராதிகள் விசார ணைகளின்றி சிறையில் நீதி மறுக்கப்பட்டு இருப்பதற்குக் காரணம் என்பதும் மறைக்கத்தக்கக்கூடிய ஒன்றல்ல.

இந்த நிலையில் ஜனாதிபதி பொலிஸ் திணைக்களத்தை யும், நீதிமன்றத்தையும் மோசடியாளர்களின் கூடாரங்கள் என வர்ணித்திருப்பது நகைப்பிற்குரிய விடயமே!

அரசியலை மோசடியாளர்கள் ஆளும்போது, நிர்வாகங் களில் ஊழல் நிகழ்வதைத் தடுக்கவே முடியாது. இதை ஜனாதிபதி புரிந்துகொள்வது அவசியமாகும்.

# நாடும் நடப்பும்




பல்கலைக்கழக.அனுமதியில்

# தரப்படுத்தலை எதிர்த்துப் போராடிய நாம் இன்று கோட்டாமுறையை எதிர்பார்க்கிறோம்

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கில் அதிபர் கைலாயபிள்ளை



(சாவகச்சேரி)

ஒருகாலத்தில் முன்னணியில் இருந்த யாழ். குடாநாட்டின் கல்வித் தரம் தற்பொழுது வீழ்ச்சி அடைந்து வருகிறது. பல்கலைக்கழக அனுமதி யில் தரப்படுத்தல் வந்தபோது, அதை எதிர்த்து போராடிய நாம் அதனைத் தொடர்ந்தே, எமது உரிமைப் போராட் டத்தை ஆரம்பித்தோம்.

இவ்வாறு சர்வதேச தமிழீழ மாண வர் ஒன்றியத்தின் அனுசரணையுடன், 'நமது ஈழநாடு' நேற்றுமுன்தினம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்திய க.பொ.த சாதாரணதர மாணவர் களுக்கான முன்னோடிப் பரீட்சை மற்றும் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வில், கல்லூரி அதிபர் கைலாயபிள்ளை தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

இனவாத அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக எங்களு டைய பிரதேச கல்வி நிலமை வீழ்ச்சி அடைந்து, இன்று மாவட்ட கோட்டாமுறை வேண்டுமென்ற நிலைமை வந்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் விஞ்ஞான, கணித, ஆங்கில பாட அடைவு மட்டம் வீழ்ச்சி அடைந்து வருகின்றது.

இதனை, நன்கு உணர்ந்து காலத்தின் தேவைக்கேற்ப நாம் இந்தக் கருத்தரங்கினை நடத்துவது வரவேற்கத்தக்கது.

எமது தமிழ் தேசியத்தின் வளர்ச்சிக்கும், சமூகப் பணி களை ஆற்றிவரும் நமது ஈழநாட்டுப் பத்திரிகை நிறுவனத் துக்கு நன்றி கூறுவதுடன் - அந்தப் பத்திரிகையின் வளர்ச்சிக் கும் நாம் உறுதுணையாக இருந்து மேலும், இதுபோன்ற கருத்தரங்குகளை நடத்துவதற்கு உறுதுணையாக இருப்போம் எனத் தெரிவித்தார். (29)

# சமாதானம் உயிர்தப்பி வாழ்கிறதென்றால் அதற்குத் தேசியத்தலைவரே காரணம்

## எழுச்சிப் பேரவை நிகழ்வில் சூ.சிறில்

(சாவகச்சேரி)

25 வருட போர் அரசியலால் சிங்கள தேசம் எதனையும் சாதித்ததுமில்லை, சாதிக்கப்போவதுமில்லை. இராணு வத்திலும், அரசியலிலும் தமிழரின் பலத்தைக் கடந்தகால பட்டறிவின மூலம் தெரிந்து கொண்ட காரணத்தாலேயே இன்று ஜனாதிபதி - புலிகள் சமாதானப் பாதைக்குத் தடையாக விருப்பதாகக் கூறி, உலகின் பார்வையைத் தன் பக்கம் திசை திருப்ப பெரும் முனைப்புடன் செயற்பட்டு வருகிறார்.

ஆனால், உலகம் இதனை நம்புவதாயில்லை. இலங்கை யில் சமாதானம் உயிர்தப்பி வாழ்கின்றதென்றால், அதற்குத் தேசியத் தலைவரின் பொறுமைதான் காரணம். பொறுமைக் கும் எல்லையுண்டு. இதை சிங்கள தேசம் நன்கு புரிந்து கொண்டு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவேண்டும்.

தென்னிலங்கையின் அரசியல் கட்சிகள், புத்திஜீவிகள் முதலானோர் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் படி அரசுக்கு அழுத்தங்கள் கொடுத்து வருகின்ற இன்றைய நல்ல சூழ்நிலையை, வரலாற்று வாய்ப்பை அரசு பயன படுத்திக்கொள்ளத் தவறும் பட்சத்தில் தமிழீழ மலர்வை, சிங்கள தேசத்தின் அழிவை எவராலும் தடுக்க முடியாது. இவ்வாறு தென்மராட்சி கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில தெரிவித்தார்.

இந்த நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி கேட்போர் கூடத்தில் கோட்ட செயலாளர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வின் பொதுச் சுடரை கோட்டப் பொறுப்பாளர் செ.கலைவாணன், வைத்திய கலாநிதி அருளானந்தம், பிரதேசசபை செயலாளர் அ.பாலச்சந்திரன், செல்வராசா, சற்குணராசா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

சிறப்புரைகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், மகளிர் அரசியல் பிரிவைச் சேர்ந்த அலைவாணி ஆகியோர் நிகழ்த்தினர். வரவேற்புரையை இணைப்பாளர் குமாரசாமி நிகழ்த்தினாா. மாவீர்தின நிகழ்வு சம்பந்தமானதும், அடுத்த் வருடத்துக்கான செயல்திட்டங்களும் சபையில் முன்மொழியப்பட்டது.

# போரூட் ஏற்பாட்டில் உளவள கருத்தரங்கு

போரூட் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அதனுடைய பங்காளர் நிறுவனமாகிய ஒளி நிறுவனத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் மது அருந்துதல், புகைத்தல் போன்றவற்றைத் தடைசெய்யும் நடவடிக்கையிலும், இதற்கு அடிமையான வர்களின் குடும்பத்தில் ஏற்படும் உளப் பாதிப்புக்கள், சமூகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் இதற்கு அடிமை யானவர்களுக்கு உரிய வைத்தியம் செய்தல் போன்ற செயற் பாடுகளை சாந்திகம் உளவளத்துணை வள ஆளணியினர் களால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்தரங்குகள் கப்பூது அந்தணத்திடல், முழு தெனி போன்ற கிராமங்களிலும் நேற்றுமுன்தினம் முதல் 25 ஆம் திகதிவரை பூதர்மடம், கவுந்தில், பருத்தித்துறை மாதா கோவிலடி, வீரபத்திராயர், வட்டுவளை, குலனகிரி, வத்தனை, தேவரையாளி, மலவத்தை போன்ற ஒன்பது கிராமங்களிலும் நடைபெறவுள்ளதாக போரூட் இணைப்பாளர் தெரிவித்தார். (12)

# அதிகமாக பெய்யும் மழையினால் நெற் பயிர்கள் அழியும் அபாயம்

அதிகமாகப் பெய்துவரும் மழை காரணமாக, நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் கவலை தெரி வித்துள்ளனர். இந்த வருடம் பெரும்போக பயிர்ச் செய் கைக்குப் பொருத்தமில்லாத வகையில் கடும் மழை பெய்து வருகிறது. இதனால் நெல் நாற்றுகள் மழை நரினுள் மூழ்கிப் போகும் அபாயநிலை தோன்றியுள்ளது.

நாற்றுக்கள் நீரில் மூழ்கியுள்ளதனால் அவை அழுகி விடும் வாய்ப்புக்கள் தோன்றியுள்ளதுடன், குருத்தடைப்பு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புக்களுமுள்ளன. இதனால் இந்த வருட நெற்செய்கை குடாநாடு மற்றும் வன்னி மாவட் டம் சார்ந்தளவில் பாதிப்புக்குள்ளாகும் நிலையே காணப் படுகிறது. நெற் பயிர்ச்செய்கை பாதிப்புக்குள்ளானாள் அரிசி யின் விலை மேலும் அதிகரிக்கக்கூடுமென எதிர்பாக்கப்படு கிறது. தற்போதும் அரிசி, நெல்லின் விலை அதிகரித்தே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (94)

அரசியற்கட்டுரை

எஸ்.எம்.ஜி





# தனி அரசியலமைப்பை உருவாக்க 77லேயே ஆணை வழங்கினர்

அரசியலமைப்பை சட்டவிரோத மான, ஜனநாயகத்துக்கு முரணான முறையில் மாற்றுவதற்கு, ஜனாதிபதி சந்திரிகா முயனறால், விடுதலைப்புலி களும் தமக்கென ஓர் அரசியல் அமைப்பை உருவாக்க முன்வரக் கூடும் என்று - எதிர்க்கட்சித் தலை வர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடந்த ஒரு வைபவத்தில் பேசுகை யில் குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப்புலிகளின் இடைக் காலத் தன்னாதிக்க அதிகாரசபை அமைப்பதற்கு, கடந்த பொதுத் தேர்தலில், தமிழ்க் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கு மக்களின் ஆணை யைப் பெற்றதன் மூலம், விடுதலைப் புலிகள் ஜனாதிபதி சந்திரிகாவைப் பின்பற்றி, புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்குத் தகுதிபெற்றவர் கள் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

விடுதலைப்புலிகள் தமக்கென புதிய அரசியலமைப்பை உருவாக்க முன்வரலாம் என்று ரணில் தெரி வித்த கருத்துக்கு, மக்கள் முன்னணி என்ற ஜே.வி.பி.யின் பிரசாரச் செய லாளரும், நாடாளுமன்ற உறுப்பினரு மான விமல் வீரவன்ச - கடும் எதிர்ப்புத் தெரிவித்து, அறிக்கை யொன்றை வெளியிட்டிருக்கிறார்.

விடுதலைப்புலிகளுக்கே தோன்றி யிராத சிந்தனை - ரணில் விக் கிரமசிங்காவுக்குத் தோன்றியிருப்ப தாக விமல் வீரவன்ச கூறியிருக்கி றார்.

இன்னொரு விடயத்தை ரணில் விக்கிரமசிங்க மறந்திருக்க வேணடும். விமல் வீரவன்சவுக்கு தெரியாமல் இருக்கலாம்.

1977 - ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் போட்டியிட்ட தமி ழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் தாயகத்தில் இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு மக்களிடம் ஆணைகேட்டது.

வட்டுக்கோட்டைத் தீர்மானத் தின் அடிப்படையில், இந்த ஆணையை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கேட்டனர். இந்தத் தேர்தலில் வெற்றி பெற்றதும் கூட்டணி உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி, இழந்த தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கான புதிய அரசியல் யாப்பை உருவாக்க வேண்டுமென் றும், 1977 ஆண்டுப் பொதுத் தேர்த லில் - தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் தேர்தல் விஞ்ஞாபனம் தெரி வித்தது.

தமிழர் தாயக மக்கள் - தமி ழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக் கையை ஏற்று, தமிழீழ அரசை மீண்டும் அமைப்பதற்கும், அதற்கான புதிய அரசியல் அமைப்பை உரு வாக்கவும் ஆணையிட்டனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் முடிந்ததும் யாழ்ப்பாணத் தில் கல்லூரி களியாட்ட விழாவொன றில் பொலிஸாரால் திட்டமிட்டுத் தொடங்கப்பட்ட குழப்பம் - நாடு முழுவதும் தமிழீழ மக்களுக்கு எதிரான இனக்கலவரமாகப் பரவி யது.

தமிழ் மக்கள் உயிர்ப்பலி கொடுத்து, உடமைகளை இழந்து இரண்டாவது தடவையாகவும் கொழும்பிலிருந்து கப்பல்களில் அகதிகளாகக் காங்கேசன்துறை யில் வந்திறங்கினர்.

தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள் ளாயினர், காவலில் வைக்கப்பட்டனர். இந்த இளைஞர்கள் விவகாரம் பற்றியே ஆட்சியாளர்களுடன், கூட்ட ணித் தலைவர்களும் பேச்சு நடத் தினர்.

தமிழ் அரசை மீண்டும் அமைப பதற்கான புதிய அரசியல் யாப்பை உருவாக்கும் முயற்சிகள் பற்றிக் கூட்டணியினர் சிந்திக்க முயன்ற தில்லை.

இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைக்க வேண்டுமென்ற தீர்மானம், வட்டுக்கோட்டை- பண்ணாகத்தில் நடந்த தமிழர் கூட்டணி உருவான முதல் மாநாட்டிலேயே ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாட்டில் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன், எஸ்.தொண் டைமான், கே.டபிள்யு. தேவநாயகம் போன்றோரும் கலந்துகொண்டிருந்த தும், தொண்டமான் கூட்டணியின் தலைவர்களுள் ஒரு வராகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக் கது.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் - இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்கு, தமிழ் மக்க ளிடம் ஆணை கேடபதறகு முனன ராக, இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வாவும், தமிழர் விடுத லைக் கூட்டணிப் பிரதிநிதிகளும் கையெழுத்திட்டு 'இழந்த தமிழ் அரசை தமிழர் தாயகத்தில் மீண்டும் அமைப்பதற்கு இந்தச் சபை தீர் மானித்திருக்கிறது' என்று கூறித் தனிநபர் பிரேரணையை கொண்டு வருவதற்கு முன்னறிவித்தல் கொடுத் திருந்தனர்.

இந்தத் தனிநபர் பிரேரணை 1976 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கை நாடாளுமன்ற ஒழுங்குப்

## ரணிலும், வீரவன்சவுமல்ல சங்கரியாரும் மறந்தாரா?

பத்திரத்திலும் இடம்பெற்றிருந்தது.

தனிநபர் பிரேணைகளுக்கு வழ மையாக நடைபெறும் கதியே,இதற் கும் ஏற்பட்டது. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் இந்தப் பிரேரணை யும் செத்துப்போய் விட்டது.

இதன்பின்னர் தான் 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படை யில், இழந்த தமிழ் அரசை மீண்டும் அமைப்பதற்கு தமிழர் தாயக மக்க ளிடம், தமிழர் விடுதலைக் கூட்டணி யினர் ஆணைகேட்டுப் பெற்றனர்.

இது ரணிலுக்கும், விமல் வீர வன்சவுக்கும் தெரியாமல் இருக்க லாம் அல்லது தெரிந்தும் மறந் திருக்கலாம் அல்லது மறைத்திருக்க லாம். ஆனால் ஆனந்தசங்கரிக்குத் தெரியாமலா?

1949 ஆம் ஆண்டில் எஸ்.ஜே. வி.செல்வநாயகம் வன்னியசிங்கம், டாக்டர்களான இ.மு.வி. நாகநாதன், வி.பரமநாயகம் போனறோர் - ஜி.ஜியின் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸிலிருநது பிரிந்து, இலங் கைத் தமிழரசுக் கட்சியை நிறுவி னர்.

'வாழு, வாழவிடு' என்ற கோட் பாட்டைக் கொண்டு, சிங்கள மக்க ளைப் போன்று தமிழ் மக்களும் தமது தாயகத்தில் சுயநிர்ணய உரிமையு டன் வாழ்வதற்கு இணைப்பாட்சி என்ற சமஷ்டி அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் தமிழரசுக் கட்சியின் கொள்கை.

இதனால் இந்தக் கட்சியைப் பெரும்பான்மைச் சமுகத்தினர் சமஷ் டிக்கட்சி என்றும் அழைக்கின்றனர்.

சமஷ்டிக் கட்சி கோரி, தந்தை செல்வாவும், தமிழரசுக்கட்சியினரும் நாடாளுமன்றத்தின் உள்ளே ஜனநா யக வழியிலும், நாடாளுமன்றத் துக்கு வெளியே காந்தீய முறையி லும் சாத்வீகப் போராட்டங்கள் பலவற்றையும் மக்களைத் திரட்டி நடத்தினர்.

சாத்வீகப் போராட்டங்கள் சிங் கள ஆதிக்க சக்திகளாலும், பேரின வாதக் குண்டர்களாலும், ஆயுத பலத்தால் அடக்கி ஒடுககப்பட்டன.

இனியும் சாத்வீகப் போராட் டமும், சமஷ்டிக் கோரிக்கையும் வெற்றிபெறாது என்ற நிலையில் தான் - 1976 ஆம் ஆண்டில் வட் டுக்கோட்டையில் கூடிய தமிழர சுக்கட்சித் தலைவர்கள் சமஷ் டிக் கோரிக்கையைக் கைவிட்டு, இழந்த தமிழரசை மீண்டும் அமைப்பதற்குத் தீர்மானித்தனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்ட ணியின் வேட்பாளராகக் கிளிநொச் சித் தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்ற வி.ஆனந்தசங்கரி - மீண்டும் தமிழீழ அரசை அமைப்பதற்குத் தான் தம்மை அர்ப்பணித்திருப்ப தாகத் தேர்தல் பிரசார மேடைக ளிலும், வாக்குக் கேட்டுச் சென்ற வீடுகளிலும் பேசியும், சொல்லியும் வந்தார்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தில் பற்றுவைத்து, ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் மீது நம் பிக்கை வைத்து, இரவு - பகலாகப் பேச்சுக்கள் நடத்தி, ஒப்பந்தங்கள் பல செய்தும் எதுவும் பயன்தராத நிலையில், சமஷ்டிக் கோரிக்கையை தந்தை செல்வாவும், கூட்டணியினரும் எப்போதோ கைவிட்டு, தமிழீழ அர சமைக்க உறுதிபூண்டனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி யின் தலைவர் நானே என்று நீதி மன்றத்தில் வீழங்குத் தாக்கல் செய்திருக்கும் ஆனந்தசங்காயார் - தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அதன் கொள்கைக்கும் அன்றும் இன்றும் விசுவாசமில்லை. மக்களுக் கும் விசுவாசமாயிருக்காததால், மக்களே நிராகரித்தாலும் மல் வத்தை மகாநாயக்க தேரரிடம் ஐக் கிய இலங்கைக்கு ஆபத்து வராமல்



பாதுகாக்கக் கோருகிறார்.

இடைக்காலத் தன்னாதிக்க அதி காரசபை - நாட்டின் ஐக்கியத்தைச் சீர்குலைத்துவிடுமென்கிறார்.

புலிகளுக்குப் பாடம் புகட்ட உடனடியாகவே சமஷ்டி அரசி யல யாப்பைத் தயாரிக்க வேண்டு மென்று அவசரக் கோரிக்கை விடுகிறார் சங்கரி.

இனவெறியர்களும், இனவெறி ஊடகங்களும் கடந்த சில வாரங் களாக சங்கரியாரின் ஆலோசனைக ளைத் தூக்கிப்பிடித்துப் பாராட்டின.

தமிழரசுக்கட்சியும், கூட்டணியும் நடத்திய போராட்டங்களால் பெற முடியாத சமஷ்டி ஆட்சி அமைப்பை சங்கரியார் (ஒஸ்லோ பிரகடனமே பிரச்சினைக்குள்ளாகியிருக்கிறது) சாமர்த்தியமாகப் பெற்றுவிடலா மென்று நினைக்கிறாரோ?

சங்கரியாரும் சரி மற்றும் கூட்டுச் சேர்ந்து கொழும்பிலும், புதுடெல்கி யிலும் மாநாடுகளும், தீர்மானங்க ளும் பிரகடனங்களும், வெளியிடும் கும்பல்களும் சரி - தமிழீழம் மலர்வ தைத் தாமதப்படுத்த முடியுமே யொழிய, தடுத்துவிட முடியாதென் பதை உணர்ந்துகொள்வது நல்லது.

இலட்சக்கணக்கான மக்களைக் கொண்ட சிறிய நாடுகளே போராட் டங்கள்மூலம் விடுதலை பெற்று உலக அரங்கான ஐ.நாவில் சுதந் திர நாடுகளாகத் தலை நிமிர்ந்து நிற்கின்றன. எட்டுக்கோடித் தமிழர்கள் வாழும இவ்வுலகில், தமிழனுக்கென்று ஒரு நாடு என்று தலை நிமிர்ந்து நிற்க முடியாது - சங்கரியாரும், கையாலாகாத கும்பல்களும் தடையாக நிற் கின்றனவே. ◆

செய்திக் கட்டுரை

அஸ்மிதா

# வடமராட்சி கிழக்கின் இருள் எப்போது விலகும்?

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளும் ஒளிர்கின்றபோது, வட மராட்சி கிழக்குப் பிரதேசம் மாத் திரம் இருளிலே மூழ்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டு குடாநாட்டின் பல பகுதிகள் இராணுவக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து, குடாநாட்டின் பல பகுதி களுக்கும் மின்சாரம் வழங்கும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கூல் எயார் நிறுவனத்தின்மூலம் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுச் சுமார் எட்டு வருடங்கள் ஆகின்றன. குடாநாட்டின் மூலைமுடுக்குகள் எல் லாவற்றுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், குடாநாட்டின் அதாவது யாழ்.மாவட்டத்தின் ஒரு பகுதியான வடமராட்சி கிழக்குப் பிர தேசத்துக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இந்தப் பிரதேசத் தில் வாழும் மக்கள் புறக்கணிக்கப் படுகிறார்களா? என்ற ஒரு சந்தேகம் மக்கள் மத்தியில் பரவலாக வியா பித்து வருகிறது.

அண்மையில் இலங்கை மின்சாரசபைத் தலைவர் ஆனந்தகுண சேகர யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, சுன்னாகம் மின்சார நிலையம், கூல் எயார் மற்றும் மின்சார நிலை யங்கள் ஆகியவற்றைப் பார்வை யிட்டதோடு மாத்திரமல்லாமல், லக்ச பானா மூலம் குடாநாட்டுக்கு மின் சாரம் வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடினார். இதற்கு ஜப்பானிய அரசாங்கம் நிதியுதவி வழங்குவதா கவும் தெரிவிக்கப்பட்டது.

போரால் மிகவும் பாதிக்கப்பட்டு பல்வேறு இடப்பெயர்வுகளைச் சந்தித்த வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் சுமார் 12 வருடங்களின் பின்னர் தமது சொந்த மண்ணில் மீளக்குடியேறத் தொடங்கி இரண்டரை வருடங்கள் ஆகிறது. ஆனால், அந்தப் பகுதி மக்க ளின் அடிப்படைத் தேவைகள் இன் னமும் பூர்த்திசெய்யப்படவில்லை.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் வடமராட்சி கிழக்கின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற் குரிய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. அதுவும் லக்சபானாமூலம் மின்சாரம் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

வரணிப் பகுதியிலிருந்து நாகர் கோயில், அம்பன், குடத்தனை ஆகிய பகுதிகளுக்கும், புதுக்காட்டுச் சந்தி யிலிருந்து மருதங்கேணி, தாளையடி, செம்பியன்பற்று ஆகிய பகுதிக ளுக்கும் இயக்கச்சியிலிருந்து ஆழிய வளை, வெற்றிலைக்கேணி கட்டை காடு ஆகிய பகுதிகளுக்கும் மின் சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படுவதோடு, மின் கம்பங்கள் மின்கம்பிகள் எல்லாம் பொருத்தப்பட்டும் - அந்த நேரத்தில் போர் மூண்டதன் காரணமாக அந்த நடவடிக்கை கைகூடாமல் போனது.

இந்தப் பிரதேசமக்கள் பின்தங் கிய நிலையிலேயே உள்ளனர். இன்று கணினி யுகம். கிராமங்கள் நகரங்களாக மாறும் சூழல். ஆனால், இந்தச் சந்தர்ப்பம் இந்த மக்களுக்கு எட்டவில்லை. இந்தப் பகுதியிலுள்ள மாணவர்கள் குப்பி விளக்குகளி லேயே கல்வி கற்று வருகின்றனர்.

பல பாடசாலைகளுக்கு பழைய மாணவர்களால் கணினிகள் அன்ப ளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. மின் சாரம் இல்லாத காரணத்தால் இநதக் கணினிகளை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்த முடியாத ஒரு நிலையிலுள்ளனர்.

இந்தப் பிரதேசம் போர் நடவடிக் கைகள் காரணமாக முற்றாக பாதிக் கப்பட்ட பிரதேசம். மீளக்குடியமர்ந்த மக்கள் சிறுகுடிசைகளை அமைத்தே வாழ்ந்து வருகின்றார்கள். குடிசைக ளில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்றவசதி மிகவும் குறைவு. இரவு நேரங்களில் பெரும்பாலான மாண வர்கள் பாடசாலைக்குச் சென்றே கல்வி கற்று வருகின்றனர்.

இதேவேளை மின்சார வசதயுள்ள நகர்புறப் பாடசாலை மாணர்களுடன் போட்டி போடவேண்டிய ஒரு நிலை இப் பகுதி மாணவர்களுக்கு ஏற்பட் டுள்ளது.

இங்குள்ள மக்கள் கடற்றொழி லையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். கடற்றொழிலை மேம்படுத்துவதற் குரிய பனிக்கட்டித் தொழிற்சாலை மற் றும் பல்வேறு தொழில் முயர்சிகளுக்கு மின்சாரம் இன்றியமையாததாக உள் ளது.

இதேவேளை, வடமராட்சி கிழக் குப் பகுதியில் இராணுவக் கட்டுப்பாட் டுப் பிரதேசத்தில் மின்சாரம் வழங் குவதற்கு நிதி ஒதுக்கீடுகள் செய் யப்பட்டுள்ள போதும், எந்தவித உருப் படியான நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது.

தற்போது மழைகாலம் ஆரம்பித் துள்ளதால், மின்கம்பங்கள் நாட்டு வதும் கஷ்டமாக இருக்கும்.

மேலும் குடத்தனைப் பிரதேசத் தின் சுற்றுச் சூழல் சங்கத்தின் ஆரத வுடன் - கணினி வகுப்புக்கள் நடாத் துப்பட்டு வருகின்றன. மின்சார வசதி இல்லாததன் காரணமாக இந்த வகுப் புக்கள் நடாத்துவதில் பெரும் சிரமம் ஏற்படுவதாக தெரி விக்கப்படுகிறது. அத்துடன் இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு வடமராடசி கிழக்கு புனரமைப்பு புனர்வாழ்வு நிறுவனம் கணினி அறைகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

அரச அதிகாரிகள் -அலுவலகங் கம் வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருகிறது. இவை ஒட்டு மொத்தமாக இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தி - மின்சார முதற்கொண்டு அனைத்து அத்தியாவசியச் சேவைக ளையும் இங்கு வழங்குவதற்கு சம்பந்தபட்ட தரப்பினர் அக்கறை கொள்ளவேண்டுஎன இந்தப் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்ற னர்.

(122)

# பலஸ்தீன அதிகாரிகள்குழு பாரிஸிலிருந்து திரும்பினர்!



பலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத்தை பார்வையிடுவதற்காக பாரிஸ் சென்ற பலஸ்தீன அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் மீளவும் மேற்குக் கரைக்குத் திரும்பியுள்ளனர்.

பலஸ்தீன பிரதமர் அகமட்கூரே பலஸ்தீன விடுதலை இயக்க பிரதித் தலைவர் ம.்.மூட் அபாஸ் மற்றும் பலஸ்தீன நாடாளுமன்ற சபாநாயகர் ராவிபட்டூ ஆகியோரே திரும்பியவர்கள் ஆவர்.

இவ்வாறு திரும்பிய இவர்கள் அரபாத்தின் பாத் கட்சி மற்றும் பலஸ்தீன விடுதலை இயக்க நிறைவேற்றுக்குழு ஆகியவற்றை கூட்டி அரபாத்தின் நிலை தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளனர்.

இதேவேளை, அரபாத் உயிரிழந்தால் றமலா பகுதியில் புதைப்பதற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், ஜெருசலேத்தில் அரபாத்தின் உடலை புதைப்பதற்கு இஸ்ரேல் அனுமதி மறுத்துள்ளது.

இதனிடையே அரபாத் இறந்தால் அவரைத் தமது நாட்டில் அடக்கம் செய்வதற்கு எகிப்து முன்வந்துள்ளது.

அரபாத் தற்போதும் கோமா நிலையிலேயே உள்ளதாகவும் - அவர் மூளை தொடர்புடைய நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர்கள் தெரிவித்தனர். ஆனாலும் இவரது நோய் தொடர்பான தெளிவான தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை.

# பலூஜாவின் மையப் பகுதிக்கு அமெரிக்கப் படை முன்னேற்றம்

(பாக்தாத்)

ஈராக்கிய தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பலூஜா நகரினை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் முகமாக பாரிய தாக்குதலை மேற்கொண்டுவரும் அமெரிக்க - ஈராக்கிய கூட்டுப்படையினருக்கும் இஸ்லாமியத் தீவிர வாதிகளுக்கும் இடையில் பலூஜா நகரின் மையப் பகுதியில் கடும் மோதல்கள் இடம் பெற்றுவருகின்றன.

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் 10 அமெரிக்கப்படையினரும் இரு ஈராக்கியப்படையினரும் பலியாகி உள்ளதாக அமெரிக்கப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், தீவிரவாதிகளின் மோசமான தாக்குதலில் அமெரிக்க மற்றும் ஈராக்கியப்படையினாரில் பலர் கொல்லப்பட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஈராக்கிய கூட்டுப் படையினர் - வான் படையினர் மற்றும் கடற்படையினரது உதவியினைப்பெற்று பலூஜா நகரில் உள்ள தீவிர்வாதிகளின் நிலைகள் மீது பாரிய தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பொலிஸ் நிலையம் உட்பட பல முக்கிய கட்டங்களையும் பிரதேசங்களையும் அமெரிக்கக் கூட்டுப் படையினர் கைப்பற்றியுள்ளனர். பலூஜா நகரின் பெரும்பாலன பிரதேசங்கள் கூட்டுப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளபோதும் பலூஜா நகரின் மையப்பகுதியில் தீவிர வாதிகள் பலத்த எதிர்ப்பைக் காட்டிவருகின்றனர்.

இப்பகுதியில் ஒவ்வொரு அங்குலத்தையும் கைப்பற்றுவதற்காக கூட்டுப்படையினர் கடுமையாகப் போராடிவருவதாகவும், இப்பகுதியில் இரு தரப்பின் பலமும் சம நிலையில் உள்ளதாகவும் பலூஜா நகரில் உள்ள பி.பி.சி. செய்தியாளர் போல் வூட் தெரிவித்தார்.

இதேசமயம், சில தீவிரவாதிகள் வெள்ளைக்கொடியை பிடித்தவாறு தம்மிடம் சரணடைந்துள்ளதாக அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.



மேலும் ஈராக்கியத் தீவிரவாதிகளின் பல தலைவர்கள் தம்மால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அமெரிக்கப்படையினர் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதை தொடர்ந்து ஜோர்தானிய தீவிரவாதிகளின் தலைவர் அபு முசாப் அல்-சர்காவி தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவித்தனர்.

இதேசமயம் ஈராக்கிய இடைக்கால அரசின் பிரதமர் இயட் அலாவியின் நெருங்கிய உறவினர்கள் மூவரை பாக்தாத்தில் வைத்து ஈராக்கியத் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர்.

அமெரிக்கப் படைகள் பலூஜா நகர்மீதான தாக்குதலை 48 மணித்தியாலங்களுக்குள் நிறுத்தாது விட்டால் கடத்தப்பட்டவர்களை கொல்லப் போவதாக புனித யுத்த சீடர்கள் எனும் தீவிரவாத அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் கிர்குக் பகுதியில் வீதியோரமாக இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஈராக்கின் தேசிய காவற் படையைச் சேர்ந்த அறுவர் கொல்லப்பட்டனர்.

இவற்றைவிட பாக்தாத்தில் இடம்பெற்ற வீதியோர குண்டு வெடிப்பில் அமெரிக்கப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டு மற்றொருவர் படுகாயமடைந்தார்.

ஸ்ரீ ராமராஜ் அன் சன்ஸ்

வெற்றுச் சாக்கு வெற்று உரப்பை மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவும், விற்பனையும் செய்யப் படும். சாக்குப் படங்கு உரப்பை படங்கு உங்கள் தேவைக்கு ஏற்றபடி ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

603, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்,
T.P 2225986

# தமிழீழ சட்டக் கல்லூரி திறப்புவிழாவிலிருந்து...





பொதுச் சுடரை ஏற்றுகின்றனர் பொன்.தியாகம் மற்றும் சாந்தா அபிமன்னசிங்கம்.



தேசியக் கொடியினை ஏற்றுகிறார் நடேசன்.



புதிய சட்டக் கல்லூரியின் தோற்றம்.




பெயர்ப் பலகையை திறந்துவைக்கிறார் சோ.தங்கன்.



விரிவுரை மண்டபத்தை திறந்து வைக்கிறார் இளங்குமரன்.



நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.



நூல் நிலையத்தை திறந்து வைக்கிறார் சோமஸ்கந்தன்.



நீதித் தேவதை உருவச் சிலையை திறந்து வைக்கிறார் மாவை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பற்றைக்குள்ளிருந்த குண்டினால் நெல்லியடியில் நேற்று பரபரப்பு!

நெல்லியடிப் பகுதியில் ஈ.பி.டி.பியினரின் முகாமுக்கு அண்மையாகவுள்ள பற்றைக்குள் குண்டு ஒன்று காணப்பட்டதையடுத்து சுமார் ஒரு மணி நேரம் பிரதான வீதியூடான போக்குவரத்துக்கள் தடை செய்யப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஈ.பி.டி.பி முகாமுக்கு முன்பாகவுள்ள பற்றைக்குள் குண்டு ஒன்று இருப்பதை படையினர் கண்டனர். இதையடுத்து குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவுக்கு அறிவிக்கப்பட்டது.

அந்த இடத்துக்குச் சென்ற குண்டு செயலிழக்கச்செய்யும் பிரிவினர் நேற்றுமாலை 4 மணிமுதல் 5 மணிவரை வீதிப் போக்குவரத்துக்கு தடைசெய்து அந்தக் குண்டை செயலிழக்கச்செய்தனர். இந்தச் சம்பவத்தால் நெல்லியடிப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து இராணுவத்தினர் தகவல் தருகையில்- இது சுமார் 20 வருடகாலம் பழைமை வாய்ந்ததென்றும், நிலத்தில் புதைததிருந்த இந்தக் குண்டு மழை வெள்ளத்தால் வெளிவந்திருக்கலாம் என்றும் தெரிவித்தனர். (12)

# பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் மட்டக்களப்புக்கு விஜயம்!

பிரிட்டிஷ் இராணுவ உயரதிகாரிகள் இருவர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்செய்து அங்குள்ள நிலைமைகள் குறித்து அவதானித்தனர்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் லெப்ரினனட் கேணல் கொலின் மாட்டின், பாதுகாப்புத் திட்ட அதிகாரி லெப்ரினன்ட் கேணல் லிட்சிலிங்கரா ஆகியோரே மட்டக்களப்புக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டத்திலும் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ரோர் கொல்ம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு நிலைவரம் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

# மேர்வின் சில்வா பதவி விலகினார்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தனது பதவியை நேற்று இராஜினாமா செய்தார்.

தனது பதவிவிலகல் கடிதத்தை நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவர் அனுப்பிவைத்தார்.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள விளையாட்டுக் கழகமொன்றின் அலுவலகத்துக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்து தாக்கியதாக இவரது மகன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதில் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவும் சம்பந்தப்பட்டதோடு கைத்துப்பாக்கியுடன் அங்கு சென்றதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், பொலிசார் அப்படி எதுவும் இல்லையென அதனை நிராகரித்திருந்தனர். இது தொடர்பாக ஆளும் கட்சிக்குள் ஜே.வி.பி. போர்க் கொடி தூக்கியிருந்தது.

தன்மீது சுமத்தப்பட்டுள்ள இக் குற்றச்சாட்டிற்கு சுதந்திரமான விசாரணை இடம்பெறவேண்டும் என்பதற்காகவும் ஜனாதிபதியின் கௌரவத்தை பாதுகாப்பதற்காகவும் - தான் நிரபராதி என நிரூபிக்கப்படும் வரை எநதப் பதவியையும் வகிக்கப் போவதில்லையென தனது இராஜினாமா பற்றி அவர் அறிவித்துள்ளார்.

# சிறுவர் இல்லம் ஒன்றின் மீது வாழைச்சேனையில் குண்டுவீச்சு!

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள சிறுவர் இல்லமொன்றின்மீது நேற்றுமுன்தினம் நள்ளிரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது இல்லத்தின் முன்பக்க சுவரில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

மத நிறுவனமொன்றால் பராமரிக்கப்பட்டுவரும் இந்த இல்லம் மீதான தாக்குதல் சம்பவத்தின் பின்னணி என்ன என்பது குறித்து தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை - நேற்று நண்பகல் 12 மணியளவில் வாழைச்சேனை பிரதேசத்தில் இரண்டு குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இதுகுறித்து வாழைச்சேனை பொலிஸார் தகவல் வெளியிடும் போது, தங்களால் கைப்பற்றப்பட்ட இரண்டு கைக்குண்டுகள் நீதிமன்ற உத்தரவின்பேரில் செயலிழக்க வைக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

## முஸ்லிம்....

கருணா குழுவினரின் நடமாட்டம் இருப்பதாகவும் இவர்களால் முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகவும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புலிகளிடம்...

இல்லை ஆனால் இது தொடர்பாக நாம் ஆராயவேண்டியுள்ளது விடுதலைப் புலிகளின் தலைவர் தனது தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடுவார் என நான் நினைக்கவில்லை.

பலஸ்தீன - இஸ்ரேல் பிரச்சினை கடந்த 56 வருடங்களாக இடம்பெற்றுவருகின்றது. பிரிட்டிஷ் அரசாங்கமும் அயர்லாந்து பிரச்சினைக்குத் தீர்வுகாணமுயற்சி செய்துவருகிறது. அதுபோலவே நாமும் இங்கு எம்மாலான முயற்சியை செய்துவருகின்றோம். ஆனாலும் எப்போது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வென்பதனை உறுதிபட்த் தெரிவிக்கமுடியாது.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க சாதகமான முன்னேற்றம் உள்ளது. ஆனால் இது தூரமோ, அண்மையோ என்பது தெரியாது. ஆனாலும் தூரமில்லை. ஆனால் சில விடயங்கள் இன்னமும் தீர்க்கப்படவேண்டியுள்ளது.

அத்துடன் இறுதித்தீர்வு தொடர்பாக பேசுவதற்கு விடுதலைப் புலிகள் மறுத்துவிட்டனர். இன்று கிளிநொச்சி செல்லவுள்ள ஜான் பீற்றர்சனிடம் சிறிய செய்தியாக பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளை வருமாறு தெரிவிக்கவுள்ளேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.

# ஏ 9 வீதியை 24 மணி...

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் அரச அதிபர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின் பத்திரிகையாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஹரீம் பீரிஸ் -

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு பகுதியை மீளவும் புனர்நிர்மாணம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இது அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படாமல் மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் வடக்கு - கிழக்கு பிரதேசங்களிலுள்ள மூன்று மாவட்டங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ளன. எனவே, இவற்றை மீள் கட்டுமானம், புனர்வாழ்வு செய்வதற்கு அவர்களின் அனுமதி தேவை.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும், இது தொடர்பாக ஒத்துழைப்பதற்கும் உடன்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து கடந்தகால யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கான புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளது. ஆனாலும், நிரந்தர சமாதானம் ஒன்று காணப்பட்டாலே உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றமுடியும். அதுவும் பாதுகாப்பு சம்பந்தமானது.

அடுத்த ஏ9 வீதியை 24 மணி நேரமும் திறப்பதென்பது சாத்தியமற்றது. ஆனால், தற்போதுள்ள நேர அளவை அதிகரிப்பதற்கான முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுவிட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பேச்சுக்கள் ஆரம்பித்த பின்னரே

# தேசிய ஆலோசனை சபையில் ஐ.தே.கட்சி பங்கேற்குமாம்!

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகியபின்னரே சமாதானம் நல்லிணககம் என்பவற்றுக்கான தேசிய ஆலோசனைப் பேரவையின் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியும் என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித்தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தமது கட்சியின் இந்த முடிவை அறிவித்தார்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் பீரிஸ் - நாட்டின் சமாதான முயற்சிகளுக்காக சர்வதேச சமூகம் அளப்பரிய சேவை ஆற்றி வருகிறது.

மேலும் உத்தேச வரவு செலவுத் திட்டத்திற்கு அப்பால் பல்வேறு தீர்வைகளை அறவிடுவதற்கு அரசாங்கம் முனைகிறது. சம்பள அதிகரிப்பை வழங்குவது வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு தீர்வாக அமையமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# நோர்வே வெளியுறவு...

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்காக கொழும்புவந்த நோர்வே தூதுக்குழுவினர் நேற்றுமாலை ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில் நோர்வே வெளிவிவகார அமைச்சருடன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும்- ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் இன்று கிளிநொச்சியில் தமிழீழ தேசிய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இடம்பெறவிருக்கும் சந்திப்பு தொடர்பாகவும் இரு தரப்பினரும் கருத்துக்களை பரிமாறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்கள் இன்றுகாலை கிளிநொச்சிக்கு விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் விஜயம்செய்வர். கிளிநொச்சியில் இவர்கள் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் சமாதான முயற்சி குறித்த முக்கிய பேச்சுக்களை நடத்தவிருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி சந்திரிகா கொடுத்துவிடும் முக்கிய செய்தியொன்றை நோர்வே தரப்பினர் இன்று புலிகளிடம் கையளிக்கவிருப்பதாகவும் கூறப்படுகிறது. தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக நோர்வே தரப்பு அதிக கவனம் செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மரண அறிவித்தல்



## நடராசா பொன்னம்மா

இல.20 ஈச்சமோட்டை கடற்கரை வீதியை வசிப்பிடமாகக்கொண்ட நடராசா பொன்னம்மா காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற நமசிவாயகம் நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகேசு சேதுப்பிள்ளையின் அன்பு மகளும், காலஞ்சென்ற நமசிவாயகம் பொன்னுப்பிள்ளையின் ஆசை மருமகளும், சிவபாதசுந்தரம் (சில்மன்), புஸ்பராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்பு அக்காவும், புவனேஸ்வரியின் ஆசைப் பெரியம்மாவும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம், ரெட்னா ஆகியோரின் அன்பு மாமியாரும், செந்தூரன், ரமணராஜ், துவாரகன், பிரதீப், நிவாசன், மகிஜா, ஆகியோரின் பாசமிகு பேத்தியும், கல்வயலைச் சேர்ந்த காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை கனகம்மா மற்றும் வட்டுக்கோட்டை நாகலிங்கம் பரமேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியாரும், ஐயாத்துரை ரத்தினத்தின் ஆசை மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிஜைக்காக இன்று வியாழக்கிழமை (11.11.2004) காலை 11 மணிக்கு (பு.நே) 20, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்வீராக

*20, ஈச்சமோட்டை,*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P. 0777078803

தகவல்:
சிவபாதசுந்தரம்
(மகன்)

(980)

# தமிழீழ சட்டக் கல்லூரி...

பலகையை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

சட்டக் கல்லூரியின் கட்டடத்தை அடேல் பாலசிங்கம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். நீதி தேவதையின் உருவச்சிலையை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

சட்டக் கல்லூரியின் நூல்நிலையத்தை கலாநிதி சோமஸ்கந்தன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சட்டக் கல்லூரியின் விரிவுரை மண்டபத்தை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. சிறப்புரைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கலாநிதி சோமஸ்கந்தன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், பத்மினி சிதம்பரநாதன், சிவனேசன் ஆகியோரும் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் சட்டவாளர்கள், காவற்துறையினர் உட்பட பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.11.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தீபாவளி சிறப்பிதழ்...

## அறியாமை இருள் அகன்ற நாளே தீபாவளி

தீபாவளிப் பண்டிகை இந்து மக்களால் கொண்டாடப்படுகின்ற குடும்ப ஆன்மீக விழாவாகும். சமூக விழாவாகவும் கொள்ளலாம். இந்தியா முழுவதிலும் வாழுகின்ற இந்து மக்களும், எமது இலங்கை நாட்டிலும், கடல் கடந்த நாடுகளிலும் வாழுகின்ற இந்து மக்களும் சமய, சமூக கலாசார ஒருமைப்பாட்டை உணர்த்தும் முறையில் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர்.

நரகாசுரன் எனும் அசுரன் இறைவனை நோக்கித் தவஞ்செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. வல்லமைகள் அகங்காரத்தையும், ஆணவத்தையும் வாரி இறைத்தன. நல்லவர்கள் சிறைப் படுத்தப்பட்டனர். வரங்கள் தந்த இறைவனையும் மறந்தான் செய்நன்றி மறத்தல், அரசுக்குணம், ஆலயங்களில் பூசைகள் ஆராதனைகள், விழாக்கள் நடைபெறுவதற்குத் தடை விதித்தான். ஏன், விளக்குகள் தன்னிலும் ஏற்றப் படக் கூடாது என்று கட்டளை பிறப்பித்தான். எங்கும் ஒரே இருள்மயம் மக்கள் படும் துயர்கள் சொல்லுந்தரமல்ல.

நரகாசுரன் கொடுமையின் வடிவமாக தீமையின் ஒட்டுமொத்தமாக இருந்தான். மகாவிஷ்ணு, கிருஷ்ணாவதாரம் எடுத்த போது, நரகாசுரனின் கொடுமைகள் எல்லை கடந்து விட்டது. மக்கள் துவாரகைக்குச் சென்று பகவானிடம் முறையிட்டனர். மக்களைப் பாதுகாக்கக் கண்ண பிரான் திருவுளங் கொண்டார்.

கொடுமைகள் விளைந்த நரகாசுரனைக் கிருஷ்ண பரமாத்மா சங்காரம் செய்தார். நரகாசுரன் இறக்கும் தருணத்தில் அவனுக்கு ஞானோதயம் ஏற்பட்டது. தான் மக்களுக்கு இழைத்த கொடுமைகளையும், அநீதிகளையும் எண்ணி மனம் வருந்தினான். தனது தவறுகளை உணர்ந்து கொண்டான். கடைசி நேரத்தில் கண்ணபிரானை வணங்கி பலவாறாகத் துதித்து பகவானிடம் ஒரு வரம் கேட்டான்.

தந்தையே என் வாழ்நாளில் நான் செய்த குற்றங்களுக்கு இந்தத் தண்டனை சரியானதே என்பதை உணர்ந்து கொண்டேன். மரணத்தை ஏற்கச் சித்தமாயுள்ளேன். இந்த நேரத்தில் எனது ஒரேயொரு வேண்டுதலைத் தந்தருள வேண்டும் என்று இரந்து நின்றான்.

நரகாசுரனுடைய கோரிக்கை என்ன என்று கிருஷ்ண பகவான் கேட்டார். நான் தவறுகளை உணர்ந்து மரணத்தை தழுவிய இந்த நாளில் உலகத்தவர் என்னை நினைவு கொள்ளும் வகையில் வரமொன்று அருள வேண்டும் என நரகாசுரன் வேண்டினான். கிருஷ்ண பகவானும் நரகாசுரனை நோக்கி நீ இறக்கும் நாள், ஆண்டு தோறும் நரக சதுர்த்தசி என்று அழைக்கப்பெறும். அதனால் உன் நினைவு நிலைபெறும். இந்தத் தினத்தில் அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து ஸ்தானம் செய்தபின் புத்தாடை அணிந்து என்னை வழிபாடு செய்பவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்க அருள்புரிவேன். இந்த வகையில் உன் நினைவை ஆண்டுக்கொருதரம் மக்கள் கொண்டாடுவர். என்று கூறி அவன் வேண்டிய வரத்தை வழங்கினார்.

அதேவேளை, நரகாசுரனின் தாயாகிய பூமாதேவியும் கிருஷ்ண பகவானிடம் ஒரு வரம் வேண்டினாள். தனது மகன் இறந்த இந்தத் தினத்தில் ஆண்டு தோறும் மக்கள் ஆயிரம் விளக்குகள் ஏற்ற வேண்டும் என்பதே அந்த வரம். அதனையும் பகவான் வழங்கினார்.

அறியாமை இருள் அகன்ற நாள், அறிவொளி பரந்தநாள், அசுரத்தன்மைகள் விலகிய நாள், தெய்வீகம் பொங்கியெழுந்த நாள், அகங்காரத்தை ஒழித்தநாள், அன்பு மலர்ந்த நாள், அச்சம் கழிந்தநாள், அமைதி பிறந்த நாள், தீயன வெல்லாம் தொலைந்த நாள், நல்லன யாவும் பொலிந்த நாள், அந்த நாள் தீபா வளித் திருநாள்.

தீபாவளித் தினத்தன்று வைகறையில் துயிலெழுந்து நல்லெண்ணெய் தலையில் தேய்த்து சிரசு ஸ்தானம் செய்ய வேண்டும். அதன் பின்புத்தாடை அணிந்து இஷ்ட தெய்வங்களை வணங்குதல் வேண்டும். தாய் தந்தையர், குரு, மற்றும் பெரியோர்களை வணங்கி அவர்களிடம் நல்லாசிகள் பெறுதல் வேண்டும். இயன்றதான தருமங்களைச் செய்தல் அடுத்து இடம்பெறும். பின்னர் உற்றார், உறவினர், நண்பர்களுடன் விருந்துண்டு மகிழ்வர்.

புறத்தூய்மையை நீராடிப் பெற்றுக் கொள்ளுதல் போன்று தீபாவளித் தினத்தில் அகத் தூய்மையும் பெற்றுக் கொள்ளுதல் இன்றியமையாதது. நல்ல எண்ணங்கள், சிந்தனைகள் உணர்வுகள் என்பனவற்றை நல்லெண்ணெய் ஆகவும், அரப்பாகவும் கொண்டு அழுக்காறு, அவா, கோபம், அகந்தை, செருக்கு, மோகம், மமதை, பொறாமை, சுயநலம் ஆகிய மன அழுத்தங்களைத் தேய்த்துக் கழுவி நீக்குதல் வேண்டும்.

புறத்தே ஏற்படும் விளக்குகள் கரிய இருளை அகற்றுகின்றன. அஞ்ஞானம் என்னும் அக இருளையும் போக்குதல் அவசியம். அதற்கு உண்மையென்ற ஒளியை உள்ளத்தில் ஏற்றுதல் வேண்டும். எமது உள்ளங்களில் அமர்ந்து எம்மை ஆட்டிப் படைக்கும் கொடிய நரகாசுரன் வேறு யாருமன்று எம்மிடம் உள்ள தீய குணங்கள் கொடிய தன்மைகள் தான் என்பதையும் உணர்வோமாக.

தீபாவளியின் பொருளை அறிந்து கொண்டாடுவதன் மூலம் மனிதர்கள் ஆவோம்.

மதுரகவி காரை
எம்.பி. அருளானந்தன்.

### தீபாவளித் திருநாளே!

### பூமித்தாய் புன்னகைப்பதற்காய்

தீபாவளித் திருநாளே!
பூமித்தாய்,
அதர்ம நிலை கண்டு,
தலை குனிந்து நிற்கிறாள்.
திரும்பும் இடங்களெல்லாம்,
தீமைகள் பெருகி...,
எதையெதை எடுத்துரைப்பது
என்றே தெரியாமல்,
பூமித்தாய்
தலை குனிந்து நிற்கிறாள்.
சமாதானமுமே,
கேள்வியாய் அல்லவா.
ஒ தீபாவளித் திருநாளே!
தீமைகள் போக்குவாயென்று
தீபங்கள் ஏற்றுகின்றோம்.
பூமித்தாய் புன்னகைப்பதற்காய்
தீபங்கள் ஏற்றுகின்றோம்.

-மீசாலையூர் கமலா.

### தித்திக்கும் தீபாவளி

கலைவளமும் எழில்வளமும் யாழ் மண்ணில் - கடந்த
காலங்கள் தந்திட்ட துன்பங்கள் மறையட்டும் எம் கண்ணில்
நிலை கொண்ட சமாதானம் மலரட்டும் நம் கையில்
நிம்மதியாக புதுப்பானை பொங்கும் வருகின்ற தை நாளில்

கற்கண்டும் கேக் துண்டும் வீட்டில் இருக்கும் - நண்பர்
வீட்டினில் இருக்கின்ற பலகாரம்தானே நாவிற்கு இனிக்கும்
புத்தாடை புதுப்பாசம் பலவர்ண பட்டாசு வெடிக்கும் - வெளியில்
சுத்தாமல் இரு என்றால் தீபாவளி என்றாலும் கசக்கும்.

ஹான்போனும் வாழ்த்து மடல்களும் காதலைச் சொல்லும்
கவரேச் இல்லாட்டிலும் அவளைக் காணநம் நெஞ்சம் செல்லும்
நெஞ்சம் எல்லாம் காதல் மனது நினைவில் இருக்கும்
கொஞ்சம் நேரம் வீட்டில் இரு என்றால் உள்நெஞ்சு துடிக்கும்.

கோலங்கள் மெட்டிஒலி அண்ணாமலை கொண்டாட்டம்
தொடர் நாடகங்களில் மக்கள் கூட்டம் தினம் நாட்டம்
ஆனந்தம் பூக்கட்டும் அழகான எம் நாட்டில்
அதைத்தானே எதிர்பார்த்தோம் நாமெல்லாம் எந்நாளும்.

- அல்லையூரான்.

### தீபம் ஏற்றிடுவோம்

நல்லதை மனதில் தாங்கி
நாயகனை துதித்து தீபம் ஏற்றிடுவோம்.
வல்லமை வேண்டும் என்று
வரிசையாய் நின்று தீபம் ஏற்றிடுவோம்.
சொல்லது சுவையாய் திகழ
சோகத்தை புதைத்து தீபம் ஏற்றிடுவோம்.
நல்லது எம்மண் என்று
நாலுபேர் கூடி நின்று தீபம் ஏற்றிடுவோம்.
கல்லதை உடைத்து தினமும்
காவியம் படைத்து தீபம் ஏற்றிடுவோம்.
வில்லது நாட்டி விரைவாய்
மலர்வதற்கு நாமும்கூடி தீபம் ஏற்றிடுவோம்.

கரவை எஸ் - பாலரி.

### தீபாவளித் திருநாளில்

தீபங்கள் ஏற்றிப் பாவங்கள் போக்கி
தீபாவளி கொண்டாடுவோம்
தாபங்கள் தளர்த்திக் கோபங்கள்
நீக்கித் திருநாளில் மகிழ்ந்திடுவோம்
காமக்குரோத மோக மதத்தை
கட்டோடு அழித்திடுவோம்
சாமவேத தர்மம்
தழைக்கச் செய்திடுவோம்
பயிரை வளர்த்து பகைமை
ஒழித்த பஞ்சத்தை நீக்கிடுவோம்
உயிரைக் காத்து உடலை ஓம்பி
ஒற்றுமை சேர்த்திடுவோம்
மானம் காத்து மதியைச் சேர்த்து
வித்தைய வென்றிடுவோம்
கானம் இசைத்து தியானம் செய்த
கடவுளை வணங்கிடுவோம்.

- கீழ்கரவை செல்லையா வல்லிபுரம்.

## மனதிற்கு மகிழ்வு தரும் "தீபாவளித் திருநாள்"

தமிழ் மக்களால், குறிப்பாக சைவ சமயத்தைப் பின்பற்றும் மக்களால் கொண்டாடப்படுகின்ற திருநாட்களில் தீபாவளியும் முக்கிய பங்கு வகிக்கிறது. மக்களால் கொண்டாடப்படுகின்ற விழாக்கள் பெரும்பாலும் ஒவ்வோர் அடிப்படைக் கருத்தினையம், சிறப்பினையும் கொண்டதாகவே இருக்கும்.

"தைப்பொங்கல்" என்பது, மக்களின் துயர்நிறைந்த காலப்பகுதியான மழைக் காலம் முடிந்து, வளம் சிறக்க ஆரம்பிக்கின்ற காலம் என்பதையே குறித்து நிற்கிறது. மனித வாழ்வுக்கு அடிப்படையான உணவுத் தேவை எப்போதும் இன்றியமையாததே. அந்தத் தேவை குறைவாகக் கிடைக்கக் கூடிய காலமாகத் தை மாதம் ஆரம்பிக்கின்றது. மனித வலுவும் முடங்கி, மனிதத் தேவைகளும் முடங்கிப் போயிருந்த நிலைமாறி புது நிலை ஆரம்பிக்கப் போகின்றது என்ற தெம்புடனேயே தைப்பொங்கல் விழாக் கொண்டாடப்படுகின்றது.

இதுபோலவே சித்திரைப் பொங்கல் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. விவசாயிகள் தமது விளை நிலங்களிலிருந்து பெறும் விளைவை நிறையப் பெற்று, உண்டு சந்தோஷிக்கும், அடுத்தவர்களுக்குக் கொடுத்து இன்புறும் நாளாகவே இது கருதப்படுகிறது. உண்மையும் அதுவே. ஆகவே மனித வாழ்வில் சந்தேகத்தை அனைவருக்கும் சமனாகப் பகிர்ந்து அனுபவிக்கக் கூடியனவாகவே இந்த விழாக்கள் கொண்டாடப்படுகின்றன என்பது மறுக்க முடியாதது.

அதேபோலவே இந்தத் தீகாவளித் திருநாளும் ஏதோவொரு காரணத்தைக் கொண்டிராமல் இருக்கமுடியாது. கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனைக் கொன்றதாகவும், அதனை நினைத்து மக்கள் சந்தோஷமடைய வேண்டுவதாகவும் சமய ரீதியாக அறிய வந்த போதிலும்.

மக்கள் தமது அயராத உழைப்பினாலும், அறிவின் திறமையாலும் பெற்றுக் கொண்ட பலன்களை முழுமையாகவும், சந்தோஷமாகவும், அடுத்தவர்களோடு பகிர்ந்தும் அனுபவிக்கின்ற இன்பமயமான நாளாகவே இதனைக் கொள்ளுதல் தகும். இந்த நாளில் எல்லோரும் புத்தாடைகள் அணிவது சிறப்பான ஒரு அம்சமாகும்.

ஆடையில்லாதவன் அரை மனிதன் என்றல்லவலா கூறப்படுகிறது. ஆகவே மனிதருக்குத் தேவையான ஆடைகளை, அதுவும் புதியதாக அவற்றை அணிந்து கொள்ள வேண்டுமென்ற நியதி, சமய ரீதியான கருத்துக்களோடு பின்னிப் பிணைந்து நிற்கிறது. ஆண்டில் ஒரு முறையேனும் உறவுகளோடு சந்தோஷமாக உண்டு உடுத்து வாழவேண்டுமென்று நினைப்பதில் என்ன தவறிருக்க முடியும்.

ஆகவே, நரகாசுரன் செய்ததாகக் கூறப்படுகின்ற இம்சைகளை நாமும் புரிந்த கொள்ளாது, எல்லோரையும் மதித்து, அவர்களின் இன்பத்தில் இடையூறு ஏற்படுத்ததாத வண்ணம் சந்தோஷமாக வாழ நினைப்பதே இத்தீபாவளித் திருநாளில் நாம் எல்லோரும் எடுத்துக் கொள்ள வேண்டிய உறுதிப்பாடாகும். அதுவே மனித வாழ்வையும் வளம்படுத்தும்.

### சிரிக்கும் தீபாவளி

காடுகள் பூக்கவும்
கானிகள் பூக்கவும்
கேடுகள் தொலையவும்
கிளர்ந்திடும் தீபாவளி

கிழக்கு சிவக்கவும்
வடக்கு சிரிக்கவும்
வளையல் பேசவும்
வந்திடும் தீபாவளி

நாடுகள் உதவவும்
நன்மைகள் உதிக்கவும்
மிடைகள் அழியவும்
மிகுந்திடும் தீபாவளி.

- நல்லை அமிழ்தன்.

# தீபாவளி சிறப்பிதழ்...

இத்திருநாளில் மட்டும் அல்ல என்றுமே தமிழ் தேசமெங்கும் ஒளிவீச வாழ்த்துகின்றோம்
இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களைக் கட்டிக்கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும், உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**எரிக்கணேஷ்**

564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2486

இல. 91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

இல. 80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

(C/3346)

அசுரனால் தேவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் நீங்கிய இந்நாளில், தமிழ்மக்களின் இன்னலும் நீங்க வாழ்த்துகின்றோம்.

**விமாகி**

யாழ்.நகரில்



தரமான வோல் ரைல்ஸ், புளோர் ரைல்ஸ், குளியலறைப் பொருட்களை
கடந்த 25 வருடங்களாக விற்பனை செய்பவர்களும் மற்றும் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கிளாஸ் வகைகள், அன்பளிப்புப் பொருட்களின்

**முன்னோடி விற்பனை நிலையம்**

இல, 27/3, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
TelePhone: 021222 6738

(C/3340)

தீபாவளித் திருநாளில் தமிழ்மக்கள் மனங்களிலும் மகிழ்ச்சி ஒளிவீச வாழ்த்துகின்றோம்.

**கிளின்ரன்**

அந்திய கால சேவை
CLINTON FUNERAL SERVICE
548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TelePhone: 021222 3518

(C/3347)

இத்தீபாவளித் திருநாளில் எல்லா மக்களும் துன்பம் நீங்கி மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**சிறி மாதவன்**

SRI MATHAVAN

T.V, டெக், வீடியோ ஓடியோ கசெட், கசெட் ரேடியோ, ரேடியோக்கள், சங்கீத ஒலிகள், சகலவிதமான கைக்கடிகாரங்கள், சுவர்மணிக்கூடுகள், பிலிம்ரோல் மற்றும் அன்பளிப்புப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tele Phone: 021222 6365

(C/3343)

இத்தீபாவளித் திருநாளில் எல்லா மக்களும் துன்பம் நீங்கி மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

திருமணப் பட்டுப் புடவைகளுக்கும் மற்றும் அனைத்து ஆடைத் தினுசுகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்



**மங்கை சில்க்ஸ்**

08, நவீன சந்தை, சுன்னாகம்.

(C/3342)

அசுரனால் தேவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் நீங்கிய இந்நாளில், தமிழ்மக்களின் இன்னலும் நீங்க வாழ்த்துகின்றோம்.

யாழ்.நகரில்
பாடசாலை மாணவர்களுக்கும், அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்ற

SILVER SHIELD SOCKS

மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்**

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம். TelePhone: 222 5392

(C/3351)

தீபாவளித் திருநாளில் தமிழ்மக்கள் மனங்களிலும் மகிழ்ச்சி ஒளிவீச வாழ்த்துகின்றோம்.

இதமான புகை இன்பத்திற்கு

**ஆர்.வி.ஜி.பீடிகள்**

நீங்கள் நாடவேண்டிய இடம்

**ஆர்.வி.ஜி.பீடிகள் ஸ்தாபனம்**

58 நல்லூர் வீதி, குருக்குத்தெரு யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்துவகைகள், ஊட்டச்சத்துக்கள், பால்மா வகைகள் யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**ஆர்.வி.ஜி. மெடிக்கல்ஸ்**

(C/3338) 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
FedEx Express
இத்திருநாளில் மட்டும் அல்ல, என்றுமே தமிழ் தேசமெங்கும் ஒளிவீச வாழ்த்துகிறோம்.

Inland & I.D.D. Calls, Internet - Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing - Cards, Laminating, CD-Writing , Binding, Parcel Services, Bus- Van - Flight Ticketing Services, & Computer - Hand phone Accessories.

259, K.K.S. Road, Jaffna.
Tel: 021 222 7835
Fax: 021 222 7836

E.mail thirumuruglan@lycosmall.com

46, Adiyapatham Road, Thirunelvely, Jaffna
Tel: 021 222 7560
Fax: 021 222 7310

(C/3350)

# தீபாவளி சிறப்பிதழ்...

தீபாவளித் தினத்தில் எமது நல்வாழ்த்துக்கள்.
அனைத்துப் புடவைகளையும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள கைராசியான
ஸ்தாபனம்



## தீமாட்டி புடவைக்கடல்

இல.122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
கிரடிற்காட், சர்வதேச மாஸ்டர் VISA
காட் (கடன் அட்டை)
ஏற்றுக்கொள்ளப்படும்.



மங்களகரமான தீபாவளித் தினத்தில் எமது மனம் நிறைந்த
வாழ்த்துக்கள்



நவீன டிசைன்களில் மனம் கவர் தங்க
நகைகளை 22 கரட்டில் உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட நீங்கள் நாடவேண்டிய இடம்



## பொன்னரசி நகையகம்

கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். T.P.0777 066427

தீபாவளி நாளன்று சீரும் சிறப்பும் பெற வாழ்த்துகிறோம்
மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான
ஸ்தாபனம்

## மகாராசி சில்க்ஸ்



திருமணப் பட்டுச்சேலைகள் சிறுவர்களுக்கான
றெடிமெட் ஆடைகள் ஆடவர்களுக்கான ரீசேட்
சேட் வகைகள் ஒரே கூரையின் கீழ்
இல.59 சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.
T.P.0777 286247

## ரோசி சில்க்ஸ்

## ROOSEE SILKS



08 ஏ பெரியகடை வீதி
யாழ்ப்பாணம்.
T.P.0777 286247

## எப்போதும் உங்கள் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் மக்கள் வங்கி



**இந்துக்களின் ஒளித்திருநாளான தீபாவளித் தினத்தன்று கடந்த வருடத்தைப் போலவே இம்முறையும் மக்கள் வங்கியின் குறிப்பிட்ட சில கிளைகள் உங்களின் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும்**

தீபாவளி தினத்தன்று மக்கள் வங்கியிலுள்ள உங்களின் சேமிப்பு கணக்கில் ரூபா 15000 த்தை அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினை ஒரு வருடத்துக்கு வைப்புச் செய்யும்போது இந்துக்களின் பாரம்பரிய கலாசாரத்தின் அடையாளமான ஓர் பித்தளை விளக்கு உங்களுக்குப் பரிசாக வழங்கப்படும்.

எமது பிரதான சம்பிரதாயபூர்வ தீபாவளி வைபவம் வெள்ளவத்தை மக்கள் வங்கி கிளையில் நடைபெறுவதுடன் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, மாத்தளை, பதுளை, இரத்தினபுரி ஆகிய கிளைகளிலும் விசேட வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எமது அனைத்து வாடிக்கையாளர்களையும் மேற்குறிப்பிட்ட கிளைகளில் ஒளித்திருநாளை கொண்டாட எம்முடன் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி
**மக்கள் வங்கி**

**அன்றைய தினம் திறந்திருக்கும் எமது ஏனைய கிளைகள் –**
அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று, அம்பாறை, கல்முனை, காரைதீவு, மஹாஓயா, நிந்தாவூர், பொத்துவில் ,சம்மாந்துறை, திருக்கோவில், உஹன, பதுளை, பண்டாரவளை, பசறை, ஜிந்துப்பிட்டி, கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், செட்டியார் தெரு, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கம்பளை, கண்டி, மாத்தளை, ஹட்டன், மஸ்கெலிய, நுவரெலிய, இராகலை, தலவாக்கலை, உடபுஸ்ஸலாவ, பலாங்கொட, அச்சுவேலி, சாவகச்சேரி, சங்கானை, யாழ்ப்பாணம் கன்னாதிட்டி க்கிளை, யாழ்ப்பாணம் பிரதான வீதி, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம், ஸ்டான்லி வீதி காங்கேசன்துறை ஊர்காவற்துறை, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, கிளிநொச்சி, மன்னார், மாங்குளம், முருங்கன், முல்லைத்தீவு, புரந்தன், வவுனியா, மட்டக்களப்பு, மட்டக்களப்பு நகர் செங்கலடி ஏறாவூர் களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, வாழைச்சேனை , கந்தளாய், கிண்ணியா, மூதூர், சேருவில், திருகோணமலைநகர்.

# தீபாவளி சிறப்பிதழ்...

தீபாவளி நாளன்று

சீரும் திருவும் பெற வாழ்த்துகின்றோம்.

எமது தயாரிப்புக்களை உடனுக்குடன்
பெற்றுச் சுவையுங்கள்

கச்சான் அலுவா, கடலை பருப்பு, மிக்சர், மில்க்ரொபி,
எள்ளு உருண்டை, கச்சான் பருப்பு, பொரி கடலை
மற்றும் இனிப்பு வகைகள்

பவானி தயாரிப்புக்கள் என்று கேட்டே வாங்குங்கள். போலிகளை வாங்கி ஏமாறாதீர்கள். வாடிக்கையாளர்களே! உங்களின் திருப்தியே எங்களின் மகிழ்ச்சி

## பவான் விலாஸ்

**குறிப்பு: வியாபாரிகளின் கவனத்திற்கு :**
தயாரிப்புத் திகதி என்பவற்றைப் பார்த்துக் கொள்வனவு செய்யுங்கள். பொருட்கள் பழுதாகலாம். அதற்குப் பொறுப்பாளிகளாக எம்மைக் கருதாதீர்கள். வியாபாரத்திற்கு அளவாகக் கொள்வனவு செய்யுங்கள்.

உங்கள் ஆதரவுக்கு நன்றி

32/1, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். (C/3344)

---

இத்திருநாளில் மட்டும் அல்ல ,என்றுமே தமிழ்த் தேசமெங்கும் ஒளிவீச வாழ்த்துகின்றோம்

**சிறுதொழில் அதிபர்களே! சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களே!**

நீங்கள் தினமும் இரத்தவேர்வை சிந்தி உழைத்தது போதும். உங்களுக்கு கைகொடுக்க நவீன், கெனடி, பிராண்ட் அரைக்கும் இயந்திரம், தோசை, வடை, சட்டினி, தேங்காய் துருவ, ஆட்டாமா குழைக்க மிளகாயக்கூட்டு, அதைவிட கீரை வகை கடைய, ஈரமாக அரைக்கும் இயந்திரம் உங்கள் தேவை எதுவானாலும் எங்களை அணுகுங்கள். உங்கள் வருமானத்தை மூன்று மடங்கு ஆக்க எங்கள் ஸ்தாபனத்தில் நவீன், கெனடி, பிறாண்ட் (சின்னம்), டீசல், என்ஜின், மின்சார மோட்டார் வகைள், மா அரைக்கும் இயந்திரம், நெல் குற்றும் இயந்திரங்களும் இவ் இயந்திரங்களின் உதிரிப்பாகங்களான பெல்ட், பெல்ட் பசை, றெகஸ், பிளேற்

எதுவானாலும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம
கெனடி, நவீன், றெக்ஸ் பிராண்ட் இயந்திரங்களுக்கு இலங்கையின் இறக்குமதியாளரும் ஏக விநியோகஸ்தர்களும் நாங்களே!

## சமுத்திரா ஹேட்டல் லிமிடட்

**குறிப்பு : 60% வரையான வங்கிக்கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும்**
117, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021-222-2938 (C/3349)

தொடர்புகளுக்கு:
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்.
தொ.இல: 021-222 5542

---

அசுரனால் தேவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் நீங்கிய இந்நாளில்,
தமிழ்மக்களின் இன்னலும் நீங்க வாழ்த்துகின்றோம்.

பாலர் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர் வரையான பாடப்புத்தகங்கள் மற்றும் பாடசாலைத் தர உள்ளீட்டு மூலப்பொருட்கள், அலுவலக அலுமாரி, மேசை, நூலக அலுமாரி மற்றும் அழிபொருட்கள், பேப்பர் வகைகள், ஆய்வு கூட உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், மனித உடற்பாகங்கள் [பிளாஸ்ரிக்] மற்றும் புரொஜெக்ரர்கள், அதற்கான திரை, றோணியோ இயந்திரம் மற்றும் கல்வி தொடர்பான அனைத்துப் பொருட்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல, 212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (C/3348)

---

தீபாவளித் திருநாளில் எல்லா மக்களும் துன்பம் நீங்கி,
மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

## இ.ச.பேரம்பலம் சகு நிறுவனம்

50,52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2988 (C/3353)

---

மங்களகரமான இந்நாளில் மெத மனம் நிறைந்த தீபாவளி வாழ்த்துக்கள்.

**அன்றும் இன்றும் என்றும் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது - அண்ணா கோப்பி ஸ்தாபனம்**

ANNA

## அண்ணா கோப்பி

(C/3354)

---

தீபாவளி நாளில் ...... புத்தாடை அணிந்து புதுவாழ்வு பெற வாழ்த்துகிறோம்.

**வடபகுதியில் பதினான்கு வருட சேவையில்**

சகலவிதமான ஓவிய வேலைகளுடன் பகுதி டிஜிட்டல் பிறிண்டிங்கில் பிளாஸ்ரிக் லைட்போட், சினிமா சிலைட் பாடசாலை மொனிட்டர், பிறிபெக்ற் (Prefect) சின்னங்கள், கீரெக்ஸ் (Keytags) மற்றும் உலகத்தரம் வாய்ந்த யப்பானிய தொழில் நுட்பத்திலான பிறீஇங் இறப்பர் சீல்கள் இன்னும் ஓவியப்பகுதி அனைத்தையும் ஒரே இடத்தில் நிறைவு செய்ய

## யசோ ஆட்கிறபிக்ஸ்

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/3352)

---

இத்தீபாவளித் திருநாளில் எல்லா மக்களும் துன்பம் நீங்கி மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.



## தில்லையம்பதி மோட்டர்ஸ்

GREAVES

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், T.V.S. உதிரிப்பாகங்கள்,
மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 222 5710
(C/3355)

---

எமது தீபத்திருநாள் நல்வாழ்த்துக்கள்

யாழ். மண்ணில் புதிய வருட வர்ணக் கலண்டர்கள், டயறிகளை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் பதிப்புச் செய்திட விரையுங்கள்

ஷாம்பவி பதிப்பகத்திற்கு

கணினி ஓவ் (f) செற் ஸ்கிறீன் பதிப்புகள் பொலிமர் இறப்பர் சீல்கள் என பல சேவைகளை நீங்களும் பெற்றிட

மிகவும் துல்லியமான முறையில் நவீன தொழில் நுட்பத்துடன் பொசிடிவ் முறையில் கலர் பிறிண்டிங் என பதிப்புகள் பல

## ஷாம்பவி பதிப்பகம்

276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவுடன் நிறைந்த சேவையைப் பெற்றிட விரையுங்கள்

மற்றும் உங்கள் தொடர்புகளுக்கு: சீ.புவீ
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
077-6184425 (C/3345)

---

இந்துக்களின் திருநாளாம் தீபாவளியில் ஈழத்தில் சமாதான ஒளி வீச வாழ்த்துகின்றோம்.

## சொலெக்ஸ்
### பல் மூக்குக் கண்ணாடியகம்

**உங்கள் கண்களை இலவசமாக பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்,**

**பல்சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்று சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்,**

**சொலெக்ஸ் மூக்குக் கண்ணாடியகம்,**
516 ஆஸ்பத்திரி வீதி,
O.P.D முன்பாக,
யாழ்ப்பாணம்.

TelePhone:
077 855328

(C/3341)